# தொண்டமானாற்றுப்பள்ளத்தாக்கினை மையப்படுத்திய சர்வதேச போக்குவரத்து மார்க்கங்களும் இடைக்கால வட இலங்கையின் சமூக பொருளாதார வரலாற்றில் அதன் செல்வாக்கும் - ஒரு வரலாற்றாய்வு

செ. கிருஷ்ணராசா

**ஆய்வுச்சுருக்கம்**

*இலங்கைத்தீவில் நீர்ப்பாசனவியல் நாகரிகம் மற்றும் நீரியல் தொழினுட்பம் தோற்றம் பெற்று அது தழைத்தோங்கிய காலம் வரைக்கும் அதாவது கி.பி.10ஆம் நூற்றாண்டு வரைக்கும் உள்நாட்டு-வெளிநாட்டு வாணிப நடவடிக்கைகள் பெருமளவிற்கு அரசநிறுவனங்களினூடாகவே முன்னெடுக்கப்பட்டு வந்திருந்தமையை இலக்கிய, சாசனவியல் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. ஆனால் கி.பி.10ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்து பொலனறுவை இராசதானியாக்கப்பட்டதன் பின்னர் இலங்கையின் பொருளாதார வலைப்பின்னல் அமைப்பில் அரசசார்பற்றதும் சுதந்திரமானதுமான வணிக நிறுவனங்கள் பல நேரடியாக பங்கு கொண்டு, வாணிபத்தில் ஈடுபட்டு வந்திருந்தமைக்கான சான்றுகள் இலங்கைத்தீவு முழுவதிலுமிருந்து கிடைத்துள்ளன. அந்த வகையில் மத்திய கால இலங்கை மக்களின் பொருளியல் வாழ்க்கை முறையானது மையஆட்சிமுறையைத்தழுவியும்,பிராந்தியப் பொருளாதார கூட்டுநிறுவனங்களாகத்தொழிற்பட்ட வாணிக நடவடிக்கைகளைத் தழுவியும் சர்வதேச வணிக கூட்டுக்களின் இணைவுடனும் வளர்ச்சியடைந்திருந்தது. இலங்கை வரலாற்றில் மத்தியகாலம் என வரையறை செய்யப்பட்டுள்ள காலப்பரப்பானது பன்மொழி, பன்மத, பல்லினச் சமுதாயங்கள் வாழ்ந்த ஒரு காலகட்டமாக அமைந்தமை பொருளியல் , பண்பாட்டுத்துறை வளர்ச்சிக்கான அடிப்படையாயிற்று.மத்தியகாலம் என வரையறுக்கப்படும் சமத்துவ- சமாதான காலத்தின் பொற்காலம் மகாயான பௌத்தத்தின் வளர்ச்சியுடன் மலர்ந்தது. இக்காலகட்டத்தில் இலங்கையில் அபரிமிதமாகத் தோற்றம் பெற்ற தமிழ் மற்றும் சிங்கள மொழியில் எழுதப்பட்ட சாசனங்கள் மற்றும் இலக்கிய வடிவங்கள் இவ்விடைக்காலத்தின் சிறந்த பொருளியல் வளர்ச்சியை உறுதிப்படுத்துகின்றன. இலங்கைத்தீவு அடங்கலாக இக்குறிப்பிட்ட வளர்ச்சிநிலை எட்டப்பட்டிருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அபரிமிதமாகக் கண்டெடுக்கப்படும் மத்தியகாலத்திற்குரிய தங்கம், வெள்ளி, செப்பு நாணயங்கள் இப்பொருண்மியத்தின் வளர்ச்சி நிலையை உறுதிப்படுத்துகின்றன. இப்பின்னணியிலே உள்நாட்டு பொருண்மிய மையங்களான நகரங்கள், துறைமுகங்கள், கிட்டங்கிகள், தெருமுடி மடங்கள் எனப் பல்வகையான சமூக, பொருளாதார நிறுவனங்கள் போக்குவரத்து வலைப்பின்னல் அமைப்பினால் இணைக்கப்பட் பட்டிருந்தன. எனவேநீரியல்வள நாகரிகமொன்றின் பல்பக்கப் பொருளியல் வாழ்வுமுறையின் பங்காளிகளாக இலங்கை மக்கள் மாற்றமடைந்திருந்த அதேவேளை வடஇலங்கைத் தமிழ் மக்களும் இம்மத்திய காலப்பரப்பில் இலங்கையின் பொருளாதார விருத்தியில் பங்கெடுத்திருந்தமையினை உறுதிப்படுத்த முடிகின்றது. வடஇலங்கைத்துறைமுகங்களில் இருந்தும், வழுக்கியாறு, தொண்டமானாறு போன்ற நீர்வழிப்போக்குவரத்திற்கு பயன்பட்ட பள்ளத்தாக்கு வெளிகளிலிருந்தும் கண்டுபிடிக்கப்பெற்ற சாசன மற்றும் தொல்லியல், நாணயவியற் சான்றுகள் இம்மத்திய கால வடஇலங்கையில் ஏற்பட்டிருந்த பொருளாதார விருத்தியை உறுதிப்படுத்தி நிற்கின்றன. இவ்வாய்வுக் கட்டுரையில் தொண்டமானாற்றுப்பள்ளத்தாக்கின் பங்களிப்பு வடஇலங்கையில் இம்மத்தியகால பொருண்மிய விருத்தியில் கொண்டிருந்த நிலையை ஆராய்வதனையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவ்வடிப்படையில் அதன் பிரதான*

*பொருளியல் மையங்கள், அவற்றினைச் சந்தைப் பொருளாதாரத்துடன் இணைத்து வைத்த போக்குவரத்து வலைப்பின்னல் அமைப்பினை ஏற்படுத்த உதவிய வணிக வழிகள், கனிம வளங்கள் மற்றும் பண்பாட்டு மையங்கள் தொடர்பாக இவ்வாய்வுமுயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

**திறவுச் சொற்கள்:** பொருளாதார வலைப்பின்னல், பன்மைச்சமூகம், மத்தியகாலம், வணிகக்கூட்டுக்கள், மகாயான பௌத்தம், வாணிபப் பண்பாட்டு முனைப்புக்கள், சமுத்திரவியல் முகப்பு, உப்பு வாணிபம், யானை வர்த்தகம், வணிக கணங்கள்.

**ஆய்வு முறையியலும் வரையறையும்**

யாழ்ப்பாணக் குடாநாடு தென் இந்தியாவுடன் மிகநெருக்கமான பண்பாட்டுத் தொடர்பு கொண்டிருந்த ஒரு பகுதியாகும். இப் பண்பாட்டுத் தொடர்பின் செல்வாக்கிற்கு அதிகம் உட்பட்டதாக தொண்டமானாற்று பள்ளத்தாக்கு காணப்படுகின்றது. வடமராட்சிக்குள் அடங்கும் இத் தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்குப் பிரதேசம் தனித்துவமான பண்பாட்டுப்பரப்பைக் கொண்டுள்ளது. ஆனால் வரலாற்றாசிரியர்களினதும் தொல்லியல் ஆய்வாளர்களதும் கவனத்தினைப் பெரிதும் ஈர்க்காத நிலையில் இருந்துவரும் தொண்டமானாற்று வெளியானது மத்தியகால வடஇலங்கையின் வரலாற்றிலும் அதன் பொருளாதார ஈட்டத்திலும் பங்கு கொண்டிருந்தமையினை வரலாற்று மூலாதாரங்களின் அடிப்படையில் தெளிவுபடுத்தவேண்டிய பொறுப்பு எமக்குரியதாகின்றது.

வளர்ச்சியடைந்து வரும் தொல்லியல் ஆய்வுகளினால் வெளிக்கொணரப்படும் சுதேச மரபுகளையும், பண்பாடுகளையும், காலந்தோறும் வளப்படுத்திய வாணிகக் கட்டமைப்பு பற்றிய இவ்வாய்வினை எல்லைப்படுத்துவது கடினமானதோர் விடயமாகும். அதாவது தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் மேலாய்வுகளினால் கிடைத்து வரும் தொண்டமனாற்றுப் பள்ளத்தாக்கினை மருவி வளர்ச்சியடைந்திருந்த வாணிகப்பண்பாட்டு மையங்கள் பற்றிய தகவல்கள் இதுவரையில் வெளிக் கொணரப்படாத விடயங்களாக உள்ளன. இந்நிலையில் மத்தியகாலப்பரப்பிற்குரியவை என அடையாளம் காணப்பட்ட பண்பாட்டு எச்சங்கள் பற்றிய விடயங்களையும் அவற்றிற்கு அடிப்படையாக அமைந்த உற்பத்தி ஊடகங்களையும் வெளிக் கொணர்வதன் ஊடாக யாழ்ப்பாணத்தில் தொண்டமனாற்றுப் பள்ளத்தாக்கின் முகத்துவாரத்திலிருந்து, உப்பு வல்லையூடாக முள்ளிக்கு அப்பால் அம்பன், குடத்தனை, நாகர்கோயில், மணற்காடு என நீண்டு சென்று நல்லதண்ணித்தொடுவாய் வரையான பிரதேசத்து வாழ்வியற்கோலங்களை வாணிபப் பொருளியல் அடிப்படையில் எடுத்துக்காட்டுவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். இவ்வாறான தகவல்களை வெளிக் கொண்டுவருவதன் மூலம் மத்தியகால யாழ்ப்பாணக் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார வலைப்பின்னலின் மூலங்களை இனங்கண்டு கொள்ள முடியும். எனவே இவ்வாய்வுப் பரப்பினை மிகப்பரந்த ஒரு பரப்பிற்குள் உள்ளடக்கிய வகையில் பண்பாட்டுக் கிராமங்களை மட்டும் மையப்படுத்தியதாகக் கொண்டு இதனை ஒரு தொடக்க நிலை ஆய்வாக வடிவமைத்துக்கொள்ள முடிந்தது. இவ்வாய்வின் காலப்பரப்பினை மத்தியகாலம் அதாவது கி.பி.10ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.17ஆம் நூற்றாண்டுகள் எனக் கொண்டு, அக்காலப்பரப்பிற்குரியதான வரலாற்று மூலங்களின் அடிப்படையில் விபரண மற்றும் ஒப்பீட்டியல் முறையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கின் பௌதீக அம்சங்கள், வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த தென்னிந்திய வணிகத் தொடர்புகளுக்கும், பாரம்பரிய- பழமையான வாழ்வுமுறைகள், பழக்கவழக்கங்கள், தனித்துவமான பண்பாட்டுக் கோலங்கள்,

தென்னிலங்கையுடனான சமயத்தொடர்புகள். போன்ற பல அம்சங்களின் நிலைபேற்றிற்கும் வழிசமைத்திருக்கக் காரணமாகின. குடா நாட்டினுள் ஒரு சிறிய குடாநாடாக விளங்கும் வடமராட்சியின் தனித்துவம் இற்றைவரைக்கும் பேணப்பட்டுக் கொண்டு வரப்படுவதற்கும் இத்தொண்டமானாற்றின் அமைப்பே காரணமாகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த பௌதீக இயல்புகளையும் சிறந்த இயற்கை மூலவளங்களையும் கொண்டுள்ள இப்பள்ளத்தாக்குப் பிராந்தியம் இதுவரையில் வரலாற்று அடிப்படையிலோ அல்லது பொருளாதார வளர்ச்சி நோக்கிலோ ஆராயப் படாதுள்ள நிலமையைக் காணக் கூடியதாக உள்ளது.

**தொண்டமானாறு தொடர்பான இலக்கிய வரலாற்று மூலங்கள்**

தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கை மையப்படுத்திய வகையில் மிகத் தொன்மையான குடியிருப்புக்களும், ஜீவனோபாயத்திற்கான மனித செயற்பாடுகளும் நிகழ்ந்து வந்திருந்தமைக்கான தொல்லியற்சான்றுகள் கிடைத்துள்ளன. இந்நதிப்பள்ளத்தாக்கின் முகத்துவாரப் பரப்பிலிருந்து உப்புவல்லை, சூரியவெளி, மண்டான், சோழங்கன், கரணவாய், கரவெட்டி, கல்லுவம், சோழஉப்புப் புலம்(சோனப்பு), முள்ளி வரையான மக்கள் வாழ்விடங்கள் தொடர்பான பண்பாட்டு வரலாற்றினை அறிவதற்கு எமக்கு போதியளவில் இலக்கிய மூலங்கள் காணப்படாத நிலையிலும் கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை, யாழ்ப்பாண வைபவக் கௌமுதி, யாழ்ப்பாண வைபவம், யாழ்ப்பாணக் குடியேற்றம் போன்ற வரையறுக்கத்தக்க வரலாற்று இலக்கிய நூல்களைக் கொண்டே இப்பிரதேசத்தில் நிறுவப்பட்ட மத்தியகாலக் குடியேற்றங்கள் தொடர்பான வரலாற்று வளர்ச்சியை அறிய முடிகின்றது (கிருஸ்ணராசா, செ., குடியேற்றங்களால் உருவான தொன்மங்கள் பற்றிய ஆய்வு, சிந்தனை, 2015, பக்.76-79). இந் நூல்கள் பெரும்பாலும் எடுத்துக் கொண்ட விபரத்தை அதாவது மத்தியகாலக் குடியேற்றங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றனவேயல்லாமல் மக்களது வாழ்வியல், பொருளியல் வளர்ச்சி தொடர்பான விடயங்கள் எவற்றையும் குறிப்பிட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கத்தக்கது.

இரண்டாம்நிலையிலுள்ள நூல்கள் வரிசையில் செ.இராசநாயகத்தின் புராதன யாழ்ப்பாணம், ஆ.முத்துத்தம்பிப்பிள்ளையின் யாழ்ப்பாணச் சரித்திரம், சுவாமி ஞானப்பிரகாசரின் யாழ்ப்பாண வைபவ விமர்சனம், எஸ். சிவலிங்கராஜா எழுதிய வடமராட்சியின் கல்விப் பாரம்பரியம், அமரர். சித்தர் சின்னத்துரை நினைவு வெளியீடான கரவெட்டியின் வாழ்வியல் (Conventional Life of Karavaddy), ப.புஸ்பரட்ணத்தின் யாழ்ப்பாணத்து வாழ்வியல், இ.பாலசுந்தரத்தின் இலங்கையின் இடப்பெயர் ஆய்வு: வடமராட்சி-தென்மராட்சி போன்ற நூல்கள் எமது ஆய்விற்கு வளம் சேர்த்தன. இவற்றினைவிட களஆய்வுகள் மற்றும் நேரடி அவதானம் மூலம் பெறப்பட்ட தகவல்கள், திருவடியான் என்ற பெயரில் ஆய்வுக் கட்டுரைகள்-தரவுகளைத் தாங்கி வடமராட்சிப் பிரதேசத்தின் பண்பாடு தொடர்பான விடயங்களை மையப்படுத்தி ஆண்டு தோறும் வெளியிடப்படும் பிரதேசமலர், மற்றும் இணையத்தளங்கள் ஊடாகப் பெறப்பட்டதகவல்கள், வல்வெட்டித்துறை யிலுள்ள ஆவணக் காப்பகத்திலிருந்து பெறப்பட்ட தகவல்கள், கையேடுகள் என்பனவும் இவ்வாய்வு முயற்சிக்கு உதவிய தகவல் தேட்டங்களாகும்.

இந்த ஆய்வினை வழிப்படுத்துவதன்பொருட்டு மூன்று கருதுகோள்களை பின்வரும் கருத்துநிலைகளில் குறிப்பிடமுடியும். அவையாவன: தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கானது,

1. பொருளீட்டத்திற்கான கனிம வளங்களைக் கொண்டுள்ள பௌதீக உறுப்பாக விளங்கி வருகின்றமை.
2. குடாநாட்டின் அரசியல், பண்பாட்டுத் தளநிலமையானது காலங்களினூடாக மாற்றத்திற்குள்ளாகி வந்திருந்த நிலையிலும் வடமராட்சி மரபுகளையும் அவற்றின் அடையாளங்களையும் தந்த பண்பாட்டுக்

கிராமங்களைப் பேணிப்பாதுகாத்து வந்த ஓர் அரணாக விளங்கி வந்திருந்தமை.

3. உள்ளூர் உற்பத்திப்பொருளாதார வாணிபப் போக்குவரத்து இணைப்புக்கான ஒரு புவியியல் அலகாக விளங்கி வந்துள்ளமை.
4. மத்திய காலத் தென்னிந்திய - வட இலங்கையின் சமூக, பொருளாதார நிறுவனங்களை ஒன்றிணைத்திருந்தமை.

## ஆற்றுப்போக்கின் மூன்று இயற்கைப் பிரிவுகள்

*34 மைல் நீளமான இப்பள்ளத்தாக்கின் போக்கானது மூன்று பிரதான பகுதிகளாக வகுத்து ஆராயத்தக்கதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. அவையாவன:*

1. தொண்டமனாற்றின் முகத்துவாரப்பகுதி
2. உப்பு-வல்லைச்சந்தியிலிருந்து முள்ளிவரையுள்ள பள்ளத்தாக்குப் பரப்பு
3. முள்ளியிலிருந்து நல்லதண்ணீர்த் தொடுவாய்-கண்டிக்குளம் வரைக்குமுள்ள கண்டல் பற்றைக்காட்டுப் பள்ளத்தாக்குப் பரப்பு.

இந்த மூன்று பிரிவுகளையும் உள்ளடக்கிய இப்பள்ளத்தாக்கானது அவ்வப்பிரிவுகளில் தனித்துவமானபௌதீகஇயல்புகளையும், பௌதீக இயல்புகளுக்கேற்ற ஜீவனோபாய உத்திகளையும் பண்பாட்டு மூலங்களையும் இற்றைவரைக்கும் கொண்டு விளங்குவதனையும் அப்பின்னணியில் உருவான பண்பாட்டுத்தோற்றப்பாடுகளையும் தாங்கியவண்ணம் மளிர்வதனைக் காண முடிகின்றது.

முகத்துவாரப்பரப்பானது இருமருங்கிலும் நெருக்கமான கோயிற்குடியிருப்புக்களையும் தனித்துவமான சமய- பண்பாட்டுக் கோலங்களையும் தாங்கிய வண்ணம் வளர்ச்சி பெற்று வந்துள்ளது. சமூக, பொருளாதார, பண்பாட்டுச் சேவை நிறுவனங்கள் இப்பகுதியில் நன்கு வளர்ச்சியடைந்துள்ளமையானது எமது ஆய்விற்கு வளமூட்டுவதாக உள்ளது. தொன்மங்கள் நிறைந்த ஒரு பிராந்தியமாகவும் இம்முகத்துவாரப்பரப்பு விளங்கி வந்துள்ளமையின் பின்னணியில் வடஇலங்கையின் பண்பாட்டு வளர்ச்சிக்கு தொடர்ச்சியான வகையில் பங்களிப்பு வழங்கிய தளமாகவும் திகழ்ந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது பிரிவாகக் கொள்ளப்படும் உப்புவல்லைச் சந்தியிலிருந்து முள்ளிவரைக்கும் உள்ள நீண்ட குடியிருப்புப் பரப்பானது எமது ஆய்வு நோக்கில் முக்கியமான பிரதேசமாகக் காணப்படுகின்றது இக்குறிப் பிட்ட குடியிருப்புப்பிராந்தியமே செழிப்பான பயிர்ச் செய்கையின் பொருளாதார வளங்களையும் அவற்றினை மையப்படுத்தி வளர்த்தெடுக்கப்பட்ட பாரம்பரியக் பண்பாட்டு நிறுவனங்களையும், போக்குவரத்துப் பாதைகள், சந்தைகள், இடுகாடுகள் போன்றனவற்றையும் கொண்டு திகழ்வதனையும் காணமுடிகின்றது. இக் குடியிருப்புப் பரப்பே மத்தியகால யாழ்ப் பாணத்தில் பிரமாண்டமான வளம் சேர்க்கும் பொருளாதார நடவடிக்கைகளையும், அரசியல் பண்பாட்டுத் தொடர்புகளையும், பொருளியல் ஈட்டத்தின் தன்மைகளையும் அங்கிருந்து கிடைக்கப்பெற்றுள்ள தொல் பொருட்சின்னங்களும், பண்பாட்டு மூலங்களும் உறுதிப்படுத்தியுள்ளன.

உப்பு வல்லை சந்தியில் இருந்து ஆற்றுப்பள்ளத்தாக்கை அண்டி கல்லுவம், மண்டான், சோழங்கன், நொத்தாரிசுதோட்டம், அந்திராண், வல்லியாவத்தை, ஆவடி எனும் கிராமங்களை உள்ளடக்கிய கரணவாய் மேற்கு- து/349, முதலைக்குழி, விபுலானந்தா, வீரபத்திராயன் என்பன கரணவாய் தெற்கு-து/ 348 மணலாவடி, உச்சில், மணற்பாத்தி, நுகவில், கலட்டி, ஆனைப்பந்தி குருக்கள்பகுதி என்பன கரணவாய் கிழக்கு- து/351, மத்தோனி, வெல்லன் என்னும் பகுதிகள் மத்தோனி து/366 தச்சன்தோப்பு, சம்பந்தர் கடையடி, பெரிய தோட்டம், சத்தியதோட்டம் என்பன கரவெட்டி மத்தி- து/367 கரவெட்டி கிழக்கு து/368 இல் காட்டுப்புலம், தெடுத்தணை துன்னாலை தெற்கில் து/370 கலிகை, வேம்படி, கட்டைப்பலை,

குடவத்தை, மாலிசந்தி, கிழான், வானன்கிரங்சி, குமரன்குளம், தல்லையப்புலம், முள்ளி என்பனவும் கப்புது, அந்தணன்திடல், கரம்பன் என்பன கப்புது து/ 382 எனும்கிராம சேவகர் பிரிவினுள்ளும் அடங்கும் (வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச அலுவலகக் கையேடு,2014). இக்குறிப்பிட்ட





Source- Provincial Irrigation Dept. Project Report - 1985

கிராமங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட பண்பாட்டு மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு தொண்டமானாற்றுப்பிராந்தியம் வரலாற்றில் பெற்றிருந்த இடத்தினை ஆய்வு செய்துகொள்ளமுடிகின்றது.

**தொண்டமானாற்றின் தரையமைப்பும் கனிம பொருட் செறிவும்**

இப்பள்ளத்தாக்கின் கீழ்ப்பரப்பானது உவர்மண் செறிந்த பிராந்தியமாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப்படும் மொத்த உவர் நீர் பரப்பானது 71.6 சதுர கிலோமீற்றர் (28 சதுரமைல்கள்) ஆகும். இதில் 13.9 சதவீதம் தொண்டமானாறு பள்ளத்தாக்கில் காணப்படுகின்றது. தொண்டமானாறு பள்ளத்தாக்கானது அதன் முகத்துவாரத்தில் இருந்து சுண்டிக்குளம் வரைக்கும் 34 மைல் நீளத்தை உடையது. இதன் அகலம் எல்லா இடங்களிலும் ஒரே அளவினதாக இல்லை. வரணி,நாவற்காடு, அம்பன் பகுதிகளை அண்டி 2.05 கிலோ மீற்றர்களாகவும், குடத்தனை பகுதிகளை அண்டி ஒடுங்கி 1.00 கிலோ மீற்றர் அகலத்தையும், வல்லை பாலம் சார்ந்து விரிவடைந்து 5.00 கிலோ மீற்றர் அகலத்தையும் பின்னர் படிப்படியாக ஒடுங்கி சென்று முகத்துவாரப்பகுதியில் 2.00 மீற்றர் அகலத்தையும் கொண்டு காணப்படுகிறது. கோடை காலத்தில் நீரின் அளவு குறைவடைவதுடன் மாரி காலத்தில் நீர் நிரம்பியும் காணப்படும். முகத்துவாரத்தில் கரையோரமணலும் கரையோரங்களில் மஞ்சள் கபில நிறம்கலந்த மண்ணும் காணப்படுகின்றது. வல்லைப் பகுதி பரந்த உவர்ப் பகுதியாகவே உள்ளது. வல்லைப் பாலத்திற்கு மேற்குப் பகுதியில் தொண்டமானாறு வரையிலும் நீரின் அளவு குறைவடைந்த போதிலும் வற்றுப் பெருக்கின் செல்வாக்கு காரணமாக குறைந்தளவில் நீரைக் கொண்டதாக காணப்படுகின்றது. இதனாலேயே இப் பகுதியில் வருடம் முழுவதும் மீன்பிடியில் ஈடுபட முடிகிறது.

தொண்டமனாறு முகத்துவாரதத்திலிருந்து குடத்தனைவரை ஏறக்குறைய மேற்கு கிழக்காக செல்லும் இந் நதியானது குடத்தனையிலிருந்து சுண்டிக்குளம் வரை வடக்குத் தெற்காக திரும்பி யாழ்ப்பாண கடனீரேரி வரை செல்லும் இது 34 மைல் நிலைக்குத்தாக 28.08 சதுர மைல் பரப்பினையும் 225 சதுர கிலோமீற்றர் பிரதேசத்தினை பின்னணி நிலமாகவும் கொண்டுள்ளது என செ.பாலச்சந்திரன் தனது கணிப்பின் படி கூறியுள்ளார்.இதன் நிலப் பயன்பாட்டை இரு தெளிவான பிரிவுகளாக வகுக்கலாம் என்றும் நெல் உப உணவுப் பயிர்கள் பயிரிடப்பட்ட ஓரளவு அபிவிருத்தி அடைந்த 80 வீதமான நிலப்பரப்பினைக் கொண்ட பகுதி,

மற்றையது கண்டல் காடு, புதர் தரிசு நிலம் என 75 வீதமான நிலப்பரப்பினைக் கொண்ட குடத்தனையிலிருந்து சுண்டிக்குளம் வரையிலான பகுதியாகும். இங்குள்ள விவசாய நிலத்தினை நம்பி வாழுகின்ற மக்கள் இவ் ஏரியின் வடகிழக்கு பக்கத்தில் வடமராட்சி கரையோரக் கடலை நம்பி வாழுகின்றனர். தொண்டைமானாற்றில் இருந்து சுண்டிக்குளம் வரை வட கிழக்குப் பக்கத்தில் வடமராட்சியையும் வட மேற்கில் வலிகாமத்தையும் தெற்கு மேற்கு பக்கங்களில் தென்மராட்சியையும் எல்லைகளாக கொண்டுள்ள தொண்டைமானாறு ஏரி குறித்து அதன் அமைப்பு வடிவத்தினை பின்வருமாறு கூறலாம்.

வல்லைப் பாலத்தில் இருந்து சாவகச்சேரி பாலம் வரையிலான பகுதியானது சிறந்த உப்பு விளையும் கனிமபொருட்செறிவு மிக்க பிரதான பகுதியாகும். கோடைக்காலத்தில் வற்றுப்பெருக்கின் செல்வாக்கிற்கு உட்படுகின்றமையால் அதிவரண்ட பருவத்தில் நீர் முற்றாக வற்றி விடுகின்றது. இதனால் மாரி காலத்தில் மட்டும் சிறிதளவில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு இவ்வேரியில் வாய்ப்பு உள்ளது. சுமார் 4 கிலோ மீற்றர் நீளமான இப்பரப்பில் இறைவரைக்கும் மீன்பிடித் தொழில் நடைபெற்றவண்ணம் உள்ளது.

வண்ணாத்திப்பாலம் அல்லது பூதன் குளிப்பாலமானது (சாவகச்சேரி பாலத்தில்) பிரித்தானியரால் முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட முதற் பாலம் என்ற வகையில் வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் இப் பாலத்திலிருந்து முள்ளி பகுதி வரையிலான பகுதியானது சுமார் 2 கிலோ மீற்றர் நீளமுடையது. இப்பகுதியும் மாரி காலத்தில் மட்டுமே நீர் தேங்கி நிற்கும் பகுதியாகும். கரவெட்டி கிழக்குப்பகுதி மக்கள் இப்பகுதி சார்ந்தே மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். கடுங்கோடை காலத்தில் நீர் அறவே வற்றி விடுகின்றது.

முள்ளிப் பாலம் தொடக்கம் முள்ளியான் வரையில் அமைந்த பகுதியானது 30 கிலோ மீற்றர் நீளமுடையது. இது உவர் ஏரிக்குரிய தாவரங்கள் கொண்ட பகுதியாகும். (சிவகுமார்,ஜெ.,1973,8) பறவைகளின் சரணாலய பகுதியாக விளங்கும் இப்பகுதியில் பறவைகளின் எச்சம் ஏரி வாழ் மீன்களுக்கான சத்துப் பொருட்களாக மாரிகாலத்தில் கிடைக்க ஏதுவாகின்றது. இங்கு வளர்கின்ற கண்டல் காட்டு மரங்களில் பெருமளவானவை யாவா, மலேசியக்காடுகளில் வளர்கின்ற காட்டினத்தாவரங்களாகவே எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இவ் இயற்கை அமைப்பின் பின்னணியில் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் வாணிபச் செல்வாக்கிற்கு உட்பட்டவையாக இவ் ஆற்றுப்பரப்பு காணப்படுகின்றது.

### மத்தியகாலப் பொருளியல் ஈட்டத்தில் ஏற்பட்ட பெருவளர்ச்சி

காலத்தினூடாக மாறி வருகின்ற பொருளாதார ஈட்டத்தின் மாற்றங்களால் பாரம்பரிய பண்பாட்டில் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன-வந்துள்ளன. கி.பி. 13ம் நூற்றாண்டுக்குப்பின் இலங்கைத்தீவிலும் இத்தகைய பொருளாதார- பண்பாட்டு மாற்றங்கள் பல தடவைகள் நிகழ்ந்துள்ளன. நீர்ப்பாசனவியல் தொழினுட்பத்தினூடாகப் பெறப்பட்ட பொருளாதார வளம் கைவிடப்பட்டு, கடல் - சமுத்திரவியல் தொடர்புடைய வாணிக பொருளியல் ஈட்டத்தினுள் இலங்கை பிரவேசித்த காலம் இக்காலமாகும். வடஇலங்கையைப் பொறுத்தவரையிலும் இம்மாற்றத்தினை தொண்டைமானாற்றுப் பள்ளத்தாக்கின் இருமருங்கிலும் நிகழ்ந்திருந்த பண்பாட்டு வெளிப்பாடுகளிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது. அந்த வகையில் பண்பாடு என்கிற தளத்தின் ஆணி வேராக இயங்கக் கூடிய தகுதி கிராமங்களுக்கு இருந்தமையால் இப்பிரதேசத்தின் புவியியல் அமைவு, தமிழக வரலாற்றுப் பின்னணி, ,சமூகவியற் கூறுகள்,சமயம்,கலைகள், சம்பிரதாயங்கள் போன்ற பண்பாட்டுக் கூறுகள் ஏற்படுத்தித் தந்த செல்வாக்குத்தான் இப்பிரதேசத்தை ஒரு சிறந்த தனித்துவமான பொருளாதார, பண்பாட்டுப் பாரம்பரியமும் வாழ்க்கைமுறையும் உள்ள நீண்ட வரலாற்றுப் பின்னணியைக்


கொண்ட பிரதேசமாக மாற்றுவித்திருந்தது. தொண்டமானாறு பள்ளத்தாக்கின் முகத்துவாரத்திலுள்ள சன்னதி முருகன் கோவிலில் தொடங்கி சுண்டிக்குளத்திலுள்ள ஒல்லாந்தரது அரண் வரைக்கும் பரந்து சிதறிக்காணப்படும் பண்பாட்டுக் கிராமங்களின் தனித்துவமான இந்துமதப் பண்பாட்டுக் கூறுகள், கிறிஸ்தவ தேவாலயங்கள், மடங்கள், ஆவரஞ்சிக்கற்கள், பின்றற்பட்டுச் சடங்குகள் - கிரிகைகள் என்பன யாழ்ப்பாணக்குடாநாட்டில் காலந்தோறும் நிகழ்ந்து வந்த ஜீவனோபாய - பொருளியல் மாற்றங்களை வெளிப்படுத்தி நிற்பதனைச் உறுதிப்படுத்துகின்றன. வெற்றிலைக்கேணியில் உள்ள கோட்டை, வெளிச்சவீட்டுப்பரப்பு ஆகியன யாழ்ப்பாண அரச காலத்தில் வரிஅறவிடும் ஆயம் ஆக தொழிற்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.


ஜீவனோபாயத்தின் பொருட்டு சமூகங்கள் ஒன்றுகூடும் மையங்களாக நாளடைவில் மாற்றம் பெற்ற மையங்கள் நகரமாகவோ அல்லது கோவிலாகவோ அல்லது பிரதான சந்தையாகவோ வடிவமாற்றம் பெற்றுள்ளன. இந்நிலையில் கடல்முகப்புத்தளங்கள் உருவாகி, பண்பாட்டடிப்படையில் மக்கள் வாழும் பிரதேசங்களாக மாற்றமடைந்தன. இவ்வாறு உருவான பல்வேறு குடியிருப்புக்களுக்கு இடையே உருவாக்கப் பெற்ற போக்குவரத்துப் பாதைகள் நாளடைவில் பிரதான வாணிகமார்க்கங்களாக மாற்றமடைந்து பல்வேறுவகையான பண்பாட்டுக்கோலங்களை துறைமுகங்களினூடாக உள்நாட்டிற்கும் வெளிநாட்டிற்கும் பரிமாற்றம் செலுத்திவந்திருந்தன.. இவ்வியல்பான செயல்முறையூடாகவே யாழ்ப்பாணக் குடாநாட்டில் வடமராட்சிப் பிராந்தியத்திற்கும் வன்னிப்பிராந்தியத்துக்குமிடையிலான வாணிக மையங்களை இணைத்து வைத்த பிரதான பண்பாட்டு வழித்தடங்களை தொண்டமானாறு இணைத்துப்பிணைத்து வைத்திருந்தது. இவ்வகையில் யாழ்ப்பாணத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கு ஒல்லாந்தர் காலம் வரைக்குமான ஒரு காலகட்டத்தில் தொண்டமானாற்றினூடாக வடிவமைக்கப்பட்ட வாணிப வழித்தடங்கள் பெரும்பங்காற்றியிருந்தன. அவ்வாணிபத்தடங்கள் வன்னிப்பிராந்தியத்தினையும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடகடற்கரை யோரமாகவுள்ள துறைமுகங்களையும் இணைத்து வைத்ததோடு, சமுத்திரவியல் பண்பாடு யாழ்ப்பாணக்குடாநாட்டில் வலிமை பெறுவதற்கும் வழிசமைத்திருந்தமையைக் காணமுடியும். அப்பண்பாட்டின் உள்ளீடுகளாக அமையப் பெற்ற துறைமுகங்களும் அவற்றினை உள்நாட்டுடன் இணைத்து வைத்த வாணிக வழிகளும் வணிகப் பொருட்களின் பரிவர்த்தனைக்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருந்தன ( கிருஸ்ணராசா, செ. *'போத்துக்கீசர்-ஒல்லாந்தர் கால யாழ்ப்பாணம்-வன்னி வாணிபத் தெருக்கள் -ஓர் ஆய்வு', வன்னி வரலாறும் பண்பாடும், 2014, ப.76)*. தொண்டமானாற்றுப்பள்ளத்தாக்கின் வரலாற்றுப் பாரம்பரியம் அவ்வாறு இடைக்காலத்தில் வளர்ச்சி பெற்றிருந்த பொருளியல் முகிழ்ப்பினை தென்னிந்திய அரச வம்சங்களுடன் இணைத்து வைத்திருந்தமையினை சாசனச் சான்றுகள் மற்றும் நாணயச் சான்றுகள் வெளிப்படுத்தியுள்ளன. அப்பொருளியல் வரலாற்று வளர்ச்சியில் முதலில் சோழப் பேரரசைத்தொடர்ந்து விஜயநகரப்பேரரசும் வடஇலங்கையின் கனிம செறிவுப் பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தமையை சான்றுகள் காட்டுகின்றன. உள்நாட்டில் யாழ்ப்பாண அரசும் அதன் பின்னர் ஒல்லாந்தர்களும் வடஇலங்கையில் இயற்கையான கனிமவளப்பிரதேசங்களை தத்தமது இறுக்கமான நிர்வாக முகாமைத்துவத் திற்குள் கொண்டிருந்தமையை வரலாற்று மூலங்கள் தெளிவுபடுத்துகின்றன (கிருஸ்ணராசா, செ., இலங்கைவரலாறு - II, 2000, ப.290).

**மத்தியகால தென்னிந்திய வம்ச அரசியல்-பொருளாதார மேலாதிக்கமும் வடஇலங்கையும்**

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் விளைவாக யாழ்ப்பாணக்குடாநாடு முழுவதிலுமாகக் கண்டெடுக்கப்பட்ட பலதரப்பட்ட நாணய

ஆதாரங்கள இக்காலப்பரப்பு மிகவும் செல்வச்செழிப்பாக இருந்தமையை உறுதிப்படுத்துகின்றன. இப்பின்னணியில் யாழ்ப்பாணத்தமிழரது பொருளியல் வரலாறும் இடைக்காலத்திலிருந்து நிரந்தரமானதும் தொடர்ச்சியானதாகவும் மாற்றுவிக்கப்பட்டிருந்தது என்பதனையும் உறுதிப்படுத்த முடிகின்றது. அவ்வகையில் வடஇலங்கைத்தமிழரது பண்பாட்டு வடிவத்தின் நிலைக்களமாக அமையப் பெற்ற யாழ்ப்பாணக் குடாநாடு தென் இந்தியாவிற்கும் மிக அருகில் அமைந்துள்ளமையால் அடிக்கடி இம்மத்தியகாலப்பரப்பில் பல்வேறு வம்ச அரசியற் பொருளாதார மேலாதிக்கத்திற்குள் உட்பட்டு வந்திருந்தமையும் குறிப்படத்தக்கது. எனவே வடஇலங்கைப்பிராந்தியம் மத்தியகாலத் தென் இந்திய அரசியல், பொருளாதார. சமூக, பண்பாட்டு நிறுவனங்களின் அதித செல்வாக்கிற்குள் நேரடியாக உட்படுத்தப்பட்டு வந்துள்ள வகையில் யாழ்ப்பாணக்குடாநாடும் தனித்துவமான பொருளியல் , பண்பாட்டு வடிவங்களை வடிவமைத்துக் கொண்ட மையைக் காண்கின்றோம். அதில் தொண்டமானாறு பள்ளத்தாக்கு பிரதேசத்தின் பங்களிப்பும் முதன்மையானதாக விளங்கி வந்திருந்தமையையும், அப்பிராந்தியம் தென்னக - இலங்கைப் பொருளியல் பண்பாட்டு பரிவர்த்தனைகளுக்கு உட்பட்டு வந்துள்ளமையையும் வரலாற்றுச் சான்றுகளுடன் உறுதிப்படுத்தப்படக்கூடியதாக உள்ளது. இவ்வாற்றுப் பள்ளத்தாக்குப் பிரதேசத்திலமைந்த கிராமங்கள், அவற்றின் பெயர்கள் , அக்கிராமங்களை இணைத்து வைத்துள்ள போக்குவரத்து வலைப்பின்னல் பாதைகள், சந்தைகள், கோவில்கள், அக்கோவில்களின் விமானத்திலுள்ள வரலாற்றுச் சிற்பங்கள் மற்றும் சவஅடக்க(இடுகாட்டு) மையங்கள், நன்னீர் நிலைகள், புற்றரவைகள், நன்செய்நிலங்கள் ஆகியன இப்பள்ளத்தாக்குடனான பொருளாதார மற்றும் ஜீவனோபாய -பண்பாட்டுத் தொடர்புகளை இணைத்து வைத்திருந்தன. மத்தியகாலத்து தென்னிந்திய ஆதிக்க சக்திகளின் பொருளியல் தேட்டத்தின் விளைநிலங்களாக வடஇலங்கையில் காணப்பட்ட கனிமவளப் பிரதேசங்கள் திகழ்ந்து வந்தமையின் ஒரு பக்கவிளைவாகத் தோற்றம் பெற்ற




**1.மத்தியகால சோழமண்டலக்கடற்கரையும்ஆடைநெய்தற் தொழிலும்**

**2.ஒல்லாந்தர்கால வடஇலங்கைக் கைத்தொழில் மையங்களும் தேவாலயங்களும் துறைமுகங்களும்.**

இவ்வாற்றுக் குடியிருப்புக்கள் வளர்த்தெடுத்த பண்பாட்டு நிறுவனங்கள் இற்றைவரைக்கும் தொண்டமானாற்றின் பண்பாட்டுச் சூழலினை வளப்படுத்தி வந்துள்ளன. ஆகவே எமது இந்த ஆய்வில் ஆற்றின் முகத்துவாரப்பரப்பிலிருந்து முள்ளி வரையிலான ஆற்றின் போக்கிற்கு இருபக்கங்களிலுமாக அமைந்த கிராமங்களை அடிப்படையாகக் கொண்டும் அங்கிருந்து சேகரிக்கப்பட்ட மானிடவியல் மற்றும் சமூகவியல் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டும் தொண்டமானாற்றின் முகத்துவாரப்பரப்பில் தற்போது வளர்ச்சி பெற்றுள்ள பல்வகையான பண்பாட்டு – சமுதாய நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டும் மத்திய கால வட இலங்கைப் பொருளியல் வலைப்பின்னல் முறையினை எடுத்து விளக்க முடியும்.

### சோழ வணிக கணங்களும் தொண்டமானாற்று வணிக மையங்களும்

சோழப்பெரும் பேரரசின் ஒன்பதாவது மண்டலமாக அல்லது மாகாணமாக "ஈழமான மும்முடிச் சோழ மண்டலம்" என்ற பெயரில் இலங்கைத் தீவு அவர்களுடைய இராணுவ, சிவில் நிர்வாகத்திற்குள் உட்பட்டிருந்தது. கி.பி. 993 அளவில் அனுராதபுரம் உட்பட இராஜரட்ட என அழைக்கப்படும் இலங்கையின் வட பகுதி முதலாம் இராஜராஜனாலும் பின்பு கி.பி. 1017 ஆம் ஆண்டில் இருந்து தீவின் முழுநிலப்பரப்பும் முதலாம் இராஜேந்திரனாலும் சோழ இராணுவ சிவில் நிர்வாக முறைகளுக்குட்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலையானது கி.பி. 1070 வரையுள்ள காலப்பகுதி மட்டுமே அதாவது தஞ்சையில் முதலாம் குலோத்துங்கனுடைய ஆட்சியின் தொடக்கம் வரை நீடித்துக் காணப்பட்டிருந்தது. இலங்கையில் பொலநறுவை என்று வழங்கப்பட்ட நகரமே ஜனநாத மங்கலம் என்ற பெயரில் தலைநகரமாக்கப்பட்டு சோழருடைய சிவில் நிர்வாகம் பரவலாக்கப்பட்டிருந்தது. திருகோணமலை சோழருடைய பிரதான கடற்படைத்தளமாக இராணுவநடவடிக்கைகளின் கேந்திர நிலையமாக, தென்கிழக்காசிய நாடுகளை இராணுவ அடிப்படையில் கட்டுப்படுத்துகின்ற மையமாக தொழிற்பட்டிருந்தது. மாந்தைத்துறைமுகம் பிரதான ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகளுக்குரிய மையமாகவும் ஓரளவுக்கு இராணுவ நடவடிக்கைகளுக்குரிய மையமாகவும் தொழிற்பட்டிருந்தது. அதேநேரம் பாரிய பிராமணக்குடியேற்றங்கள் நிகழ்த்தப்பட்டபிரதேசங்களாகவும் அவை மாற்றப்பட்டிருந்தன. இதே மாதிரியான மத்தியகாலப் பிராமணக் குடியேற்றங்கள் கரணவாய், துன்னாலை போன்ற தொண்டமானாற்றில கரையோரக்கிராமங்களிலும், யாழ்ப்பாண இராச்சியகாலத்தில் தும்பளையிலும் உருவாகியிருந்தன. இப்பின்னணியில் தொண்டமானாற்றின் சிலமையங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த முகாமைத்துவ மையமாக விளங்கியிருந்தன. இந்நிலையிலே வடமராட்சிப் பகுதியிலே பொலிகண்டியில் காணப்படுகின்ற கங்கை கொண்டான் கிராமமும் பிராமணக்குடியேற்றமாக இருந்தமையினை ஒரு வகையில் பேரரசச்சோழ மரபினருக்கும் அவ்விடத்துக்குமுரிய தொடர்பினை நன்கு எடுத்துக் காட்டுவதாகவே உள்ளது. அலை அலையாக அமைந்த மண் மேடுகளின் மேல் முதிர்ந்த பனை மரங்களைக் கொண்டிருக்கும் அப்பிரதேசத்தினை மிகஆழமான வாணிபத்தெருக்கள் ஊடறுத்துச் செல்கின்றன. அவை வல்வெட்டித்துறை நகரையும் பருத்தித்துறை (பெருந்துறை) நகரையும் இணைப்பவையாகக் காணப்படுகின்றன. இக்கிராமத்தின் அயல் கிராமங்களாக பொலிகண்டி, பாலாவி, ஆதித்தன் புலம் என்பன அமைந்துள்ளன. பொலிகண்டியிலே சோழர் காலத்துக்குரிய நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனவே கங்கை கொண்டான் என்றழைக்கப்படும் இக்கிராமத்திற்கும், இக் குடா நாட்டின் கண் அமைந்து காணப்பட்டிருக்கக்கூடிய சோழர்களது அரசியல் பண்பாட்டு மையங்களுக்குமிடையே மிகவும் நெருக்கமான தொடர்புகள் இருந்திருக்கின்றன – அவை வாணிபப்பெருந்தெருக்களால் ஒன்றினைக்கப்பட்டிருந்தன.

**சோழர்கால தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கும் வாணிபத்தெருக்களும்**

தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கில் பரவலான குடியிருப்புக்களும், வாணிப மையங்களும், வாணிபத் தெருக்களின் இணைப்புக்களும் ஏற்படுத்தப்பட்ட ஒரு காலப்பரப்பாக சோழர் காலம் அமைந்து கொண்டமைக்கான தொல்லியற்சான்றுகள் எமக்குக்கிடைத்துள்ளன. குறிப்பாக நகரங்கள், கோயில்கள், பெருந்தெருக்கள் என்பன சோழர்காலத்தைய வடஇலங்கையின் பிரதான உறுப்புக்களாக அமைந்து கொண்டன. பெருந்துறைமுகத்திலுள்ள (பருத்தித் துறை துறைமுகத்திலுள்ள) நகரக்கட்டமைப்பு சோழர்காலத்திலேயே தொடங்கப்பெற்றிருந்தமை காரணமாகவே யாவாவிலுள்ள கடாரத்துடனான நெல்வாணிபத்தொடர்புகள் இத்துறைமுகத்துடன் மிகநெருக்கமாக பிணைக்கப்பட்டிருந்தன. கற்கோவளத்தில் கண்டுபிடிக்கப்பெற்ற சுடுமண்வளையக் கிணறு, மற்றும் நாகர்கோவிலுக்கண்மையிலுள்ள கௌத்தன் துறைமுகத்தினருகே கண்டுபிடிக்கப் பெற்ற செங்கட்டிக்கிணறும் சோழர்காலத்திற்குரியவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வடிப்படையில் பருத்தித்துறைப்பிரதேசத்தின் நகரத்திட்டமிடல் மற்றும் பெருந்தெருக்களின் உருவாக்கம் என்பன மத்தியகால சோழர்களது வாணிப நடவடிக்கைகளுடனும், அவர்களது பண்பாட்டு நடவடிக்கைகளுடனும் தொடர்புபட்டவையாகவே இருப்பது தெளிவாகின்றது.


**கோட்டைத்தெருவும் சோழர்களது வாணிப நடவடிக்கைகளும்**

வடமராட்சி, வதிரியில் உள்ள பெரியதோட்டம், கோட்டைத் தெரு என்னும் மத்திய கால கிராமங்களில் தொல்லியல் முதனிலையாய்வுகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் பழமை வாய்ந்த புராதனமான புளியமரத்தின் அடித்தளத்திலிருந்து சோழர்கால மட்பாண்டத் தொகுதிகளுடன் இணைந்து காணப்பட்ட நீள்சதுரமான ஐம்பொன்னாலான ஒரு வெட்டுக்காசினையும் மீட்டெடுக்க முடிந்தது. இந்த வெட்டுக்காசில் பதிக்கப்பட்டுள்ள ஒரு பெண் தெய்வத்தினுடைய உருவமானது வணிக கணமொன்றினது குறியீடாக இருப்பதும் ஆய்வுக்குரிய ஒரு மூலமாக இப்பொழுது அமைகின்றது. அத்தோடு இக்குறிக்கப்பட்ட கிராமங்களில் நிலவிவரும் ஐதீகங்கள் மற்றும் இங்குள்ள 400 வருட பழமை வாய்ந்த புளியமரத்தினைப் பற்றிய ஐதீகங்கள் சோழர்களது வாணிப நடவடிக்கைகளையும் பண்பாட்டுத் தொடர்புகளையும் உறுதிப்படுத்துவனவாக உள்ளன.

இப்புளியமரத்தடியில் இருந்து எமக்குக் கிடைத்த மட்பாண்டங்கள் யாவும் பிற்பட்ட சோழர் காலகட்டத்திற்குரியவை என்பதனை வகை மாதிரியிலான (Typology) ஒப்பீட்டு - கணிப்பீட்டு முறை வெளிப்படுத்தி நிற்கின்றது. யாழ்ப்பாணக் கோட்டையின் தெற்குப் பக்கச் சுவருக்குள் இருந்து மீட்டெடுக்கப்பட்ட பெருமளவிலான சோழர்கால மட்பாண்டங்களுடன் (தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டவை) ஒத்த தன்மையை உடையவையாகக் கோட்டைத்தெருவில் கிடைத்த மட்கலங்கள் காணப்படுகின்றன. மிகவும் தடித்த கழுத்து வளையங்கள் சோழர்கால வெண்கல சிற்பங்களில் இடம் பெறும் கழுத்தலங்கார முறைகளை ஒத்ததன்மை இம்மட்பாண்டங்களிலும் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. மிகக் கூர்மையான வரைபுகள், வெட்டுக்கள்; இம்மட்பாண்டத்தொகுதியில் காணப்படும் சிறப்பியல்புகளாகின்றன. எனவே சோழர் காலத்திலிருந்தே ஊரின் நடுவேயுள்ள இப்புளியமரத்தடி மன்று; ஆகத் தொழிற்பட்டு வந்திருக்க வேண்டும் என்பதை இச் சான்றுகள் நன்கு எடுத்து நிரூபிக்கின்றன. கூடவே கிடைத்த நாணயமும் அக்கருத்தினை மேலும் உறுதிசெய்யும் சான்றாக அமைவதோடு, இப்பிராந்தியத்துடன் சோழர் கொண்டிருந்த வாணிபத் தொடர்புகள் பற்றி ஆராய்வதற்கு அடிப்படை மூலமாகவும் அமைந்து கொள்வதனைக் காணலாம்.

அண்மைக் காலங்களில் சோழ மன்னரது நாணயங்கள் பல குடாநாட்டின் உள்ளும், புறமும்

கிடைத்திருப்பது தமிழர் பண்பாட்டு வரலாற்றுக்கு உதவும் மூலங்களை இனங்கண்டு கொள்வதற்கு மேலும் வழிதேடித் தந்துள்ளன எனலாம். இப்பின்னணியிலேயே கோட்டைத்தெரு என்ற மையத்தில் கிடைத்த ஐம்பொன்னினாலான நீள்சதுரமான க்ஷ வெட்டுக்காசு; (ஈழக்காசு) மத்தியகால வடமராட்சி பிராந்தியத்துடனும், குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டுடனும்







**மத்தியகால வடஇலங்கையின் வணிகமார்க்கங்களை ஒருங்கிணைத்த பௌதீக அமைப்பு**

சோழர்கால வணிக கூட்டுக்களில் ஒன்றான நானாதேசிகள் என்றழைக்கப்பட்ட சாத்துக்கள் கொண்டிருந்த வியாபாரத் தொடர்பு பற்றியும், அப்பின்னணியில் சோழப் பண்பாடு இப்பிராந்தியத்தில் பரந்து கொண்டிருந்த முறைமை பற்றியும் அறிந்துகொள்வதற்கேற்ற வரலாற்று மூலமாகின்றது.

**மத்தியகால நல்லூரினை மையப்படுத்திய வாணிபப் பாரம்பரியமும் தொண்டமானாறும்**

கி.பி. 13ம் நூற்றாண்டுத் தொடக்கத்துடன் வடஇலங்கையில் அராபியர் வசம் சிக்கியிருந்த சமுத்திரவியல் வாணிப மையங்களை தம்வசமாக்கிய நிலையில், புதிய பொருளாதார மையங்களை உள்நாட்டிலும், மற்றும் மேற்கு-கிழக்கு கடற்கரைபிராந்தியங்களிலும், கன்னியாகுமரி மற்றும் இராமேஸ்வரத்திலும் உருவாக்கியதோடு, இரண்டாம் பாண்டியப்பேரரசினை தனது பாதுகாப்பரசாகவும் மாற்றிக்கொண்டு ஆரியச்சக்கரவர்த்திகள் அரசு கோலோச்சத்தொடங்கியது. இவ்வாறு புதியதோர் அரசு வடஇலங்கையில் புத்தூக்கம் அடைந்தமையைத் தொடர்ந்து ஒரு புதிய சமூக எழுச்சி ஏற்பட்டுக்கொண்டது. மத்தியதரைக்கடற்பிராந்திய கடல்வாணிப வலைப்பின்னலுடன் தொடர்புபடுத்தப்பட்ட வகையில் வடஇலங்கையில் மையங்கொண்டிருந்த வாணிபப் பகைப்புலத்தின் செழிப்பில், நல்லூரில் ஆரியச்சக்கரவர்த்திகள் என்ற வம்சப் பெயரில் அரசு ஒன்று வளர்த்தெடுக்கப்பட்டது. கள்ளியங்காட்டுச் செப்பேடுகள், விஜயநகரப்பேரரசுக்காலக் கல்வெட்டுக்கள், பல்வகைப்பட்ட சேது நாணயங்கள், தோம்புச்சுவடுகள் மற்றும் இராசதானிக்காலத்தில் உருவான மருத்துவ – சோதிட இலக்கியங்கள் போன்ற மூலாதாரங்கள் வாயிலாகவும் இவ்வரசின் இருப்புப் பற்றியும் செழிப்புப்பற்றியும் உறுதிப்படுத்திக்கொள்ள முடிகின்றது. இவைமாத்திரமன்றி யாழ்ப்பாணத்தமிழரது மரபுகள், தொன்மங்கள், ஐதீகங்கள், வடஇலங்கையிலுள்ள சமூக-சாதிப் பிரிவுகள் போன்ற சமூகவியல், மானிடவியல் ஆதாரங்களின் அடிப்படையிலும் நல்லூர் இராசதானியின் இருப்புப்பற்றி மிகவும் விரிவாக தமிழ்வரலாற்றாசிரியர்கள் ஆராய்ந்துள்ளனர். பேராசிரியர்களான எஸ். பத்மநாதன், கா.இந்திரபாலா, வீ. சிவசாமி, பொ.இரகுபதி, ப.புஸ்பரட்ணம் ஆகியோர்

வரலாற்றாய்வியல் மற்றும் தொல்லியல் நெறிமுறையின் அடிப்படையில் நல்லூர் இராசதானி அதன் வளர்ச்சிப் பருவங்கள் தொடர்பாக ஆய்வு செய்துள்ளனர். நல்லூர் பற்றிய வரலாற்றுத் தொன்மங்களுடன் இணைந்த நிலையில் பெறப்பட்ட நல்லூர் இராசதானி தொடர்பான வரலாற்று வடிவங்களையும் ஆராய்வதற்கு முயற்சி எடுத்தபோது நல்லூர் பற்றிய தொன்மங்கள் யாவும் மத்தியகால குடியேற்றங்களால் உருவானவை என்பது தெளிவாகியது. இவற்றின் பின்னணியில் தொண்டமானாற்றுப்பள்ளத்தாக்கு முக்கிய பங்காற்றியிருந்தமையும் தெளிவாகியது. (செ. கிருஸ்ணராசா, 2015, சிந்தனை, பக்.69-85)

எமக்கு கிடைத்துள்ள மிகவும் நம்பகம் வாய்ந்த செப்பேட்டுப்பதிவேடாக கிடைத்திருப்பது கள்ளியங்காட்டுச் செப்பேடாகும். 'யாழ்ப்பாணம் இராச்சியம் பண்ணியருளிய செகராசசேகர மகாராசா' என இடம்பெறும் கள்ளியங்காட்டுச் செப்பேட்டுத் தொடர் நல்லூர் இராசதானி பற்றிய செய்தி கூறும் முதலாவது இலங்கைச்செப்பேட்டுச் சாசனப்பட்டயமாகும். இப்பட்டயம் தருகின்ற வரலாற்றுச் செய்திகள் யாழ்ப்பாணத்தின் பொருண்மிய வரலாற்றிற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. மத்திய காலத்தில் இலங்கையில் பிராந்திய அரசமுறை ஒன்று இருந்தமைக்கான ஒரேயொரு செப்பேட்டு ஆவணமாக கள்ளியங்காட்டு செப்பேடு மட்டுமே காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் வன்னிப்பிராந்தியத்திற்கும் குடாநாட்டிற்குமிடையே காணப்பட்டிருக் கக்கூடிய வாணிபப் பண்பாட்டுத் தொடர்புகளை உறுதிப்படுத்துவதற்கு கள்ளியங்காட்டுச் செப்பேடுகள் அடிப்படையாதாரமாக அமைந்துள்ளன.

நல்லூருக்கும் தும்பளை- கற்கோவளத்திற்கும் இடையிலான வாணிபத் தொடர்புகளின் பின்னணியில் தொண்டமானாற்றுப்பள்ளத்தாக்கு பெரும்பங்கு வகித்துள்ளமை தெளிவாகின்றது. அத்தாய், அத்துளு, அந்தணன் திடல் ஊடான கால்வாய் நீர்ப்பாதை தம்பசெட்டியையும் தொண்டமனாற்றுப்பள்ளத்தாக்கினையும் மாயக்கை நீரேந்து பரப்பினூடாக இணைத்து வைத்திருந்ததன் அடிப்படையில் தும்பளை துணைதலைநகரான கோப்பாயுடன் இணைக்கப்பட்டு பின்னர் நல்லூருடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்தமை மேலும் ஆராயத்தக்கது. மாயக்கைப் பரப்பில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முற்பட்ட காலக் கூரையோடுகள், சுடுமண் விளக்குகள், மத்திய காலத்திற்குரிய அராபிய நாணயங்கள், சோழமட்பாண்டங்கள், அராபியமட்பாண்டங்கள் போன்ற தொல்பொருட்களை இக்கட்டுரையாசிரியரினால் சேகரிகசுப்பட்டுள்ளமையின் அடிப்படையில் இந்த வாணிப மார்க்கத்தினை அடையாளம் காணப்படமுடிந்தது. தம்பசெட்டி இற்றைவரைக்கும் படகுகட்டும் கைவினைத் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குவதும் இவ்வாணிபமார்க்கத்தின் பின்னணியில் உருவான வளர்ச்சி என்றே குறிப்பிடமுடியும். தம்பசெட்டி-வியாபாரிமூலை என்ற இரு பண்பாட்டுக்கிராமங்களும் மத்திய காலத்திலிருந்து புடவைவியாபாரத்தில் சிறந்து விளங்கி வந்திருந்தமைக்கான சான்றுகளும் எமக்குக்கிடைத்துள்ளன. சம்பு- சம்பான்-சம்புக்கோளம்-பருத்தித்துறை என்ற பதப்பிரயோகங்கள் புடவை வியாபாரத்திலிருந்தே தோற்றுவிக்கப்பட்டிருந்தன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாணிபப் பண்பாட்டின் பின்னணியில் தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கினூடாக அமையப்பெற்ற நீர்வழிப்போக்குவரத்துக்களே வளம் சேர்த்திருந்தன என்பதனை கிடைத்த தொல்லியற் சான்றுகளின் அடிப்படையில் உறுதிப்படுத்தக் கூடியதாகவுள்ளது.

**ஒல்லாந்தர்கால வணிக வழிகள்**

எமக்குக்கிட்டிய காலத்திற்குரிய வாணிபப் பாதைகளை தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்குடன் இணைந்த வகையில் அடையாளம் கண்டுகொள்வதற்கு போத்துக்கீசர்,

ஒல்லாந்தர் காலத்திற்குரிய பதிவுகளும், டச்சுரோட்டுக்களும் முதலில் உதவி நிற்பதனைக்காணமுடிகிறது. வடமராட்சியில் தமது வர்த்தக ஏகாதிபத்தியத்தைப் பரப்பிய முதலாவது ஐரோப்பிய இனத்தவர் போர்த்துக்கேயரே ஆவார். கி.பி. 15ம் நூற்றாண்டு தொடக்கத்தில் ஐரோப்பிய நாடுகளுள் கப்பல் கட்டும் கலையிலும், கப்பலோட்டும் கலையிலும் முதலில் தேர்ச்சி பெற்ற நாடாக போர்த்துக்கல் மிளிர்ந்தது. இதற்குச் சமகால ஐரோப்பிய சூழலில் நிலவிய அகக்காரணிகளும், இந்து சமுத்திரக் கரையோர மற்றும் தூரகிழக்காசிய நாடுகளில் காணப்பட்ட வர்த்தக வளம் நோக்கிய தேடல் என்ற புறக்காரணியும் போத்துக்கேயரது இந்துசமுத்திரத்தின் மீதான ஆதிக்கத்தற்கு உந்துதலாக அமைந்து காணப்பட்டது. இதைவிட இந்நாடு ஏனைய ஐரோப்பிய நாடுகளை விட கடல்சார் கப்பற்பயணங்களில் அதீத நாட்டம் கொள்வதற்கு வேறும் பல தனித்துவ காரணங்களும் தூண்டுதலாக அமைந்தது. இவ்வாறு ஒருங்குசேர்ந்த பல சாதக அம்சங்களின் பெறுபேறாகவே கீழைத்தேசங்களை நோக்கி கடல் மார்க்கமாக வந்த முதலாவது ஐரோப்பியன் என்ற பெருமையை வாஸ்கொடகாமா என்ற போர்த்துக்கேயன் பெறுவதற்கு வழிவகுத்தது.11 இவ்வாறு 15ம் 16ம் நூற்றாண்டுகளில் இந்து சமுத்திர வர்த்தகத்தின் பெரும்பகுதி போர்த்துக்கேயரது ஆதிக்கத்தின் கீழேயே இருந்தது. இவர்களை அடுத்து இந்து சமுத்திரப் பிரதேச வர்த்தக நடவடிக்கைகளில் தலையிட்ட இனத்தவர் ஒல்லாந்தர் ஆவார்.

16ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக பல வகையிலும் முன்னேற்றமடைந்த ஒல்லாந்தர் கீழைத்தேசங்களுக்கு வருவதற்குப் பல வழிகளிலும் முயன்றனர். மேலும் போர்த்துக்கேயரது கத்தோலிக்கத்திற்கு எதிராகத் தமது புரட்டஸ்தாந்து சமயத்தைப் பரப்புவதும் இவர்களது ஆவலுக்குத் தூண்டுதலாக அமைந்தது. இவ்வாறு ஐரோப்பாவில் ஒல்லாந்தர் எழுச்சி பெறவும் போர்த்துக்கேயருக்கு இருந்த கடலாதிக்கம் வீழ்ச்சி கண்டது. 1595இல் ஒல்லாந்தர் வலிமை பெற்ற குடியேற்றவாதிகளாகக்கிழக்குத் தொடங்கினர். அதுமுதல் தமது கப்பல்களைக் கீழைத்தேசங்களுக்கு அனுப்ப ஆரம்பித்தனர். முதன் முதலில் அவர்களது கப்பல்கள் கி.பி. 1602 இல் இலங்கைக்கு வந்தன. கி.பி. 1658 இல் யாழ்ப்பாணத்தை ஒல்லாந்தர் கைப்பற்றியதோடு யாழ்ப்பாணத்தில் அவர்களது ஆதிக்கம் நிலைபெறலாயிற்று. அதாவது 1658 இல் கரையோரப்பகுதி முழுவதும் ஏற்பட்ட ஒல்லாந்தர் ஆட்சி 1796 இல் ஆங்கிலேயரது ஆட்சி ஏற்படும் வரை இங்கு நீடித்து நிலைத்திருந்தது.

138 ஆண்டுகளுக்கு மேலாக யாழ்ப்பாணத்தில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிய ஒல்லாந்திரின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக வர்த்தகம் காணப்பட்டது. போர்த்துக்கேயரைத் தொடர்ந்த இவர்களது அரசியல் நிர்வாக, சமூக சமயத்துறைகளில் குறிப்பிடத்தக்க பல மாற்றங்கள் ஏற்பட்டது. இலங்கையில் ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்ட பகுதிகளை நிர்வகிக்க டச்சுக்கிழக்கிந்திய கம்பனியின் கீழ் கொழும்பில் ஒரு பிரதிநிதி நியமிக்கப்பட்டார். இவ் ஒல்லாந்த ஆள்பதிக்கு அடுத்த நிலையிலேயே யாழ்ப்பாணம் காலி ஆகிய கொமாண்டர்களின் படைத்தளபதிகள் தமது அங்கத்துவப் பதவிகளை வகித்தனர். ஒல்லாந்தர் நிர்வாக நோக்கத்திற்காக கொழும்பு கொமாண்டரி, யாழ்ப்பாணக்கொமாண்டரி, காலிக்கொமாண்டரி என மூன்று பிரிவுகளாகவும், இலங்கையைப் பிரித்தனர். ஒல்லாந்தர் கால இலங்கையின் முழு நிர்வாகத்திற்கும் மையமான ஆள்பதியும் மைய ஆட்சிப்பீடமாக கொழும்பு விளங்கியிருந்த போதும் யாழ்ப்பாணம் காலிக் கொமாண்டரிகளின் நீதிநிர்வாக அதிகார வரம்பானது கொழும்பினை விடவும் அதிகரித்தே காணப்பட்டிருந்தது. கொமாண்டரிக்கு அடுத்து இரண்டாம் நிலையில் அதிகாரம் திசாவை என்பவரிடமும் அடுத்து ஒப்பர்கூவட் (Opepehoofed) என்பவரிடமும் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாண நீதி நிர்வாகக் கொமாண்டரியின் பரப்பானது புத்தளத்தின் வடக்கிலிருந்து வடமேற்காக வளர்ந்து சென்று வடகிழக்கு இலங்கையின் கடற்கரைப் பரப்புக்களை உள்ளடக்கிய வண்ணம் சென்று மட்டக்களப்புக் கோட்டையின் தெற்கு வரை அதன் பரப்பு விரிவடைந்திருந்தது. யாழ்ப்பாணக் கொமாண்டோவின் ஆள்புலத்துக்குரிய கேடயச் சின்னத்தில் ஒல்லாந்தக் கம்பனியைக் குறிக்கும் "V.O.C." என்ற எழுத்தோடு யாழ்ப்பாணக் கற்பகதருவான பனைமரம் வரையப்பட்டிருந்தது (Phillipus Baldaeus ,1759). இவர்களது வர்த்தகம், நெசவு, நெல், பருத்தி சாயத்துக்குரிய மரச்செய்கை, நெசவு, குதிரைவளர்ப்பு, முத்துச் சங்கு குளித்தல் உப்பு, சுண்ணக்கல், பனைமரம் முதலியவற்றில் தங்கி இருந்தது.

**பள்ளத்தாக்குடன் இணைக்கப்பட்ட ஒல்லாந்தர் காலத் தெருக்களின் வலைப்பின்னலமைப்பு**


போக்குவரத்தின் அவசியத்திற்கு மூலகாரணமாய் விளங்குவது வாணிபப் பொருட்களின் பரிவர்த்தனையே. இப்பின்னணியில் வடமராட்சியில் இன்றைய கால கட்ட தெருக்களின் வளர்ச்சியை பின்னோக்கிப் பார்க்க வேண்டிய அவசியம் உள்ளது.' ஒற்றையடிப் பாதைகளாகவும் மண் ஒழுங்கைகளாகவும் பயன்படுத்தப்பட்ட பல பாதைகளை தெருக்களாக ஆக்கி, ஒல்லாந்தர் தமது அரசியல், மத பொருளாதார நோக்கத்திற்காக அவற்றை அபிவிருத்தி செய்திருந்தனர். அவர்கள் இதனை இங்கே செய்திருக்காவிட்டால், உள்ளூர்த் தெருக்களுடனான போக்குவரத்து தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்காவிட்டால் பூங்காக்கள் நிரம்பிய நகரங்கள், பலர் வாழக்கூடிய இடங்கள் நிரம்பிய பரந்த நகர்ப்புறங்கள், மற்றும் திட்டமிட்டு அமைக்கப்பட்ட உபநகரங்கள் முதலியவை தோன்றியிருக்க வாய்ப்பு இருந்திருக்காது. கிராமங்கள் நகரங்களை இணைத்து ஒரு நாடு முழுவதையும் ஒரே அலகாக ஆக்குவதற்கு தெருக்கள் பெரிதும் உதவியிருக்கின்றன. ஒரு நாட்டின் பொருளாதார நிலைமை சரியான நிலையில் இருக்க வேண்டுமென்றால் போக்குவரத்து இன்றியமையாததாகும். அந்த வகையில் ஒல்லாந்தர்கால இலங்கைப் பண்பாட்டியலில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாக அமைந்தது வீதிகளாகும். மனித சமுதாய வளர்ச்சியிலே டச்சுரோட் ஒரு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றது. வரலாற்றுக் காலத்திலிருந்து இலங்கையில் வீதிகள், வண்டிற்பாதைகள், நெருஞ்சாலைகள் என்பன அமைக்கப்பட்டிருப்பதும் ஒல்லாந்தர் காலத்திலேயே அவை காத்திரமான தோற்றத் தையும், பங்களிப்பினையும் பெற்று மக்கள் வாழ்வில் பிரதான ஊடகமாகத் திகழ்ந்தன என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்தவகையில் டச்சுவீதிகளை சிறப்பாக எடுத்து நோக்கிப்பார்க்குமிடத்து, வல்லிபுரம் தேவஸ்தானம் அமைந்துள்ள இடத்திலிருந்து வெற்றிலைக் கேணிக் கண்மையிலுள்ள மண்டலாய் பிள்ளையார் ஆலயத்தின் பின்வீதிவரைக்கும் கடற்கரையோரமாக டச்வீதி அமைக்கப்பட்டுள்ளது. அடுத்தது மாசிவன் சந்தியிலிருந்து எழுதுமட்டுவாலூடாக தொண்டமானாற்றின் பள்ளத்தாக்கினை ஊடறுத்து கிளாலி வரைக்குமான ஒரு பிரதான டச்வீதி அமைக்கப்பட்டுள்ளது. இவை தவிர கௌத்தன்துறையிலிருந்து தென்கிழக்குப் பக்கமாக நல்லதண்ணீர்த்தொடுவாய்வரை (சுண்டிக்குளம் வரைக்கும்) டச்வீதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அடுத்து வரணியையும் வல்லிபுரமூடாக கௌத்தன்துறையை இணைத்த வகையிலும் மேலும் வடமராட்சியில் உள்ள டச்வீதிகளை இணைத்து தொடர்புபடுத்தும் வகையிலும் பல டச்சுவீதிகள் அமைக்கப் பட்டுள்ளன.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணமூடாக மன்னாருக்கு டச்சுவீதி அமைக்கப்பட்டிருந்தது. இவ்வீதி பூநகரியூடாக மன்னாரைச் சென்றடைந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து கச்சாய்-கிளாலி ஊடாக பழைய முறுகண்டிக்கு ஒரு டச்சுவீதி அமைக்கப்பட்டிருந்தது. அவ்வீதி

பழைய வட்டக்கச்சியூடாக இராமநாதபுரத்தை இணைத்தவண்ணம் காட்டு மார்க்கமாக பழைய முறுகண்டி நோக்கிச் செல்கின்றது. இற்றைவரைக்கும் இப்பாதையின் ஊடாக மாடுகளை, எருதுகளை கால்நடையாக கொண்டு வரும் முயற்சிகள் நடைபெற்றவண்ணமேயுள்ளன. வடமராட்சியிலுள்ள மற்றுமொரு டச்சுவீதி இப்பொழுது நாச்சிமார் வீதி என நாமமிடப் பட்டுள்ளது. இவ்வீதி ஒல்லாந்தர் காலத்தில் பொலிகண்டித்துறைமுக நகரத்தையும் வல்லை உப்புக் கழியையும் எள்ளங்குளம் என்ற கிராமத்தினூடாக இணைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. பருத்தித்துறை வெளிச் சவீட்டுப்பரப்பிலிருந்து ஆரம்பிக்கும் கரையோரப்பாதை சுண்டிக்குளம் ஊடாகச் சென்று, பின்னர் கரைச்சி, முல்லைத்தீவு பின்னர் அங்கிருந்து கதிர்காமம் வரைக்கும் உள்ள முக்கியமான துறைமுகநகர்களையும்






1. Commercial Route linking between Thondamanaru Lagoon and Iranaimadu Basin
2. Resource Centers along with Thondamanaru Basin

கிராமங்களையும் இணைத்திருப்பது ஒல்லாந்தர் காலத்திற்கு முன்நிகழ்ந்த வாணிப பண்பாட்டு நடவடிக்கைகளின் விளைவினால் ஏற்பட்டது எனக் குறிப்பிடப்பட்டாலும், ஒல்லாந்தர் காலத்தில் அவை மீண்டும் புதுப்பொலிவு பெற்று விளங்கின என்றால் அது தவறாகாது.

வடமராட்சியில் ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட வீதிகள் மக்களது மனைகளையும், சந்தைகளையும், இடுகாட்டு மையங்களையும், தேவாலயங்களையும் இணைத்திருந்ததோடு கடற்கரையோரத்துறைமுகப்பட்டினங்களையும் அவை தொடுத்திருந்தன. பருத்தித்துறை துறைமுகநகர் இவை எல்லாவற்றிற்கும் உயிர்ப்பினை ஊட்டுகின்ற வாணிப நகராக ஒல்லாந்தர் காலத்திலிருந்தே வளர்ச்சி பெற்றுவிட்டிருந்தமையைக் காண்கின்றோம்.

ஒல்லாந்தர்களது காலகட்டத்திலே மாட்டுவண்டிகள், குதிரைகள், பல்லக்கு, யானை முதலியன போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்பட்டன. வாணிகப் பொருள்கள் எல்லாம் ஒரே இடத்தில் உற்பத்தியாவதில்லை.

வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பொருள்கள் உற்பத்தியானபடியால் அப்பொருள்களை எல்லாம் ஓரிடத்தில் கொண்டு சேர்ப்பதற்கு வண்டிகள் பெருமளவு பயன்படுத்தப்பட்டன. மக்கள் பலர் கால்நடையாகவும் மாட்டுவண்டிகளிலும் போக்குவரத்துச் செய்தனர். குதிரைகளை ஒல்லாந்தர் தமது நாடுகளிலிருந்து கொண்டு வந்து இங்கு போக்குவரத்திற்காகப் பயன்படுத்தினர்.

இவைதவிர மாட்டுவண்டிகளில் வாணிகப் பண்டங்களை-பொருட்களை வாணிகர் பலர் ஒன்று சேர்ந்து பொருள்களை வண்டிகளில் ஏற்றிக்கொண்டு சென்றார்கள். ஒல்லாந்தர் போக்குவரத்துச் சேவைகள் சிலவற்றைத்திருத்தி அமைத்தார்கள். சில புதிய தெருக்கள் அமைக்கப்பட்டன. சிற்றாறுகளை கடத்தற்குப் பாலங்கள் அமைக்கப்பட்டன. தரைமார்க்க போக்குவரத்துச் சேவைகள் ஓரளவு சீர்படுத்தப்பட்டமை பொருளாதார அபிவிருத்திக்கு மட்டுமன்றி அவர்களின் ஆதிக்கத்தினை வலுப்படுத்துவதற்கும், பொருளாதாரத்தை தன்வயப்படுத்தற்கும் உதவிற்று. வர்த்தக நோக்கத்தினாலும், மதம் பரப்பும் நோக்கத்தினாலும், அரசியல் நோக்கத்தினாலும். வீரதீர செயல்களினாலும் இலங்கைக்கு வந்த ஒல்லாந்தர் எண்ணிய நோக்கத்தை அடைவதற்கு வழிகாட்டியாக டச்சுவீதிகள் இவர்களால் அமைக்கப்பட்டன.

### ஒல்லாந்தர் கால தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கில் ஜீவனோபாயமும் வாழ்க்கை முறைகளும்

இப் பிரதேசத்தின் ஜீவனோபாயமாக பெருந்தோட்ட விவசாயம், உள்ளூர் வர்த்தகம், மீன்பிடி, பனைம்பொருள் உற்பத்திக் கைத்தொழில்,உப்பு உற்பத்திக் கைத்தொழில் எனப் பலவும் மேற்கொள்ளப்பட்டது. அந்த வகையில் உற்பத்தித் தத்துவம், உற்பத்திப் பொருட் தத்துவம், விற்பனைத் தத்துவம், சந்தைப்படுத்தல் தத்துவம், சமூக சந்தைப்படுத்தல் தத்துவம் என்பன ஒல்லாந்தர் காலத்திலிருந்து சிறப்பாகக் கைக்கொள்ளப்பட்டு வருகின்றமையை இங்கு காணமுடிகின்றமை குறிப்பிடத்தக்கது. இன்று இவற்றின் பிரதிபலன்களையே வடஇலங்கை மக்கள் தமது பண்பாட்டின் அடிப்படைகளாகக் கொண்டுள்ளனர்.

### தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்குக் கிராமங்களில் ஒல்லாந்தப் பயிர்வகைகள்

ஊரிக்கரையை அடுத்து தரவையும்; தரவையை அடுத்து ஓரளவு உவர்த்தன்மையான வயல் நிலங்களும், அதனை அடுத்து நன்நீர் வயல்நிலங்களும், அதற்கு அப்பால் மேட்டுநிலத்தோட்ட நிலங்களும், அதற்கு மேலே குடியிருப்பு நிலங்களும் தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கில் காணப்படுகின்றன. அத் தன்மை சில இடங்களில் ஒடுங்கியும், சில இடங்களில் விரிந்தும் காணப்படுகின்றது. கரவெட்டிப் பிரதேச செயலகம் 193 சிறு கிராமங்களைக் கொண்டது. அவற்றில் 08 கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட 40 கிராமங்கள் தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கினை மருவிய வகையில் சிறந்த விவசாய நிலங்களையும் ஒல்லாந்தரால் அறிமுகப்படுத்தப்பட்ட பயிர்உற்பத்திகளையும் கொண்டுள்ளது. இங்கு பெருமளவு நெல் பயிரிடப்பட்டாலும் இங்கு காலபோகம், சிறுபோகம், ஆடிப் பயிர் (ஆடிக்காய்) என 03 நிலைகளில் உபஉணவுப்பயிர் உற்பத்தி செய்யப்படுகின்றது. தொண்டமானாற்று முகத்துவாரப்பரப்பில் கோடைகாலத்தில் நீர் வரத்தானது உப்பு நீர் படுக்கையிலிருந்து நன்னீரத்தரையை நோக்கி வருவதனால் உள்ளூர் மண், நீர் இரண்டும் உவராகி மாற்றமடைந்து செல்வது சர்வசாதாரண நிகழ்வாக்கப்பட்டுவிட்டது. இந்நிலையில் பயிர்களின் உற்பத்தி இங்கு குறிப்பாக ஒல்லாந்தர் பயிர்வகைகளுள் ஒன்றான புகையிலை உற்பத்தி மந்த நிலையை அடைந்து விட்டது. பள்ளத்தாக்கினை மருவிய கிராமங்களில் நன்னீரின் தரம் குறைவடையாது இருப்பதற்காகவும் காலப் போக்கில் மண்ணின் தரம் குன்றி விவசாயச் செய்கை பாதிக்கபபடாதிருப்பதற்காகவும் ஒல்லாந்தர் காலத்தில் வெள்ளவாய்க்கால்களை வெட்டுவித்து

அவற்றினைத் தொண்டமானாற்றுடன் இணைப்பித்து பள்ளத்தாக்கின் நீர்மட்டத்தினை நிரந்தரமாகப் பேணியவகையில் பொருளாதார ஈட்டத்திற்கான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இப்பொழுது பள்ளத்தாக்கு நன்னீராக்கப்பட்டுள்ளது. இவ் ஏற்பாட்டினால் மீன்பிடி பாதிக்கப்பட்டதோடு, விவசாயச் செய்கையில் ஆர்வம் அதிகரித்த போக்கும் காணப்படுகின்றது. கரணவாய் தெற்கில் 238, மேற்கில் 377, கரவெட்டி கிழக்கில் 227, மத்தொனியில் 110, கரவெட்டி மத்தியில் 137, துன்னாலை தெற்கில் 225, கப்பூதில் 85 குடும்பங்கள் வீதமும் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றன. சின்னக் கறுப்பன், மொட்டைக் கறுப்பன், பச்சைப் பெருமாள், முருங்கன், சீமாட்டி போன்ற நெல்லினங்கள் இப்பள்ளத்தாக்கில் பயிரிடப்படுகின்றன (ஆழ்வார்ப்பிள்ளை,பொ.,2005,64).

புகையிலை, வெங்காயம், மிளகாய், கீரை, போஞ்சி, புடோல், வெண்டி, பாகல், கத்தரி, பூசணி, வாழைக்காய், வத்தாழை, வெள்ளரி, நீர்ப்பூசணி, பயிற்றை, சோளம், கருணைக்கிழங்கு, மரவெள்ளிச் செய்கை என ஒல்லாந்தர்காலத்தில் இப்பள்ளத்தாக்கில் அறிமுகப்படுத்தப்பட்டு, வருமானம் ஈட்டப்பட்டது. குறிப்பாகப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை முறைகளில் சில பயிர்வகைகள் பயிரிடப்பட்டமைக்கான பதிவுகளும் கிடைத்துள்ளன. அவற்றுள் மரவள்ளி அம்முறையில் பயிரிடப்பட்ட ஒரு பயிராகும் ( Lewis,J.P., The Mannual of Vanni District in Ceylon, 1895, p.255). தொண்டமானாற்றின் தெற்குப் பள்ளத்தாக்குப்பரப்பில் தென்மராட்சிப் பரப்பிற்குள் பெருந்தோட்டப்பயிர் வகையாக மரவள்ளி, முருங்கை ( உலாந்தா முருங்கை) சாயவேர் என்பன உற்பத்தி செய்யப்பட்டமைக்கான பதிவுகள் கிடைத்துள்ளன (கிருஸ்ணராசா,செ.,இலங்கை வரலாறு-II, 2000,. ப.291).

கல்லுவத்தில் மிளகாயும், சோழங்கனில் பீற்றூட்,கரட்,உருளைக்கிழங்கு என்பனவும் ஒல்லாந்தர்காலப் பயிர்வகைகளுள் பிரபலயமானவை. வடமராட்சியில் விவசாயத்தில் மிகத்தரமான உபஉணவு உற்பத்திப் பொருட்கள் சோழங்கனிலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இப்பொழுது இங்கு 1448 கெக்டர பரப்பில் இல் விளையும் நெல் பழமையான முறைப்படி சேமிக்கப்படுகின்றது. ஒல்லாந்தர் காலத்தில் தொண்டமானாற்று பள்ளத்தாக்கிலுள்ள வயல் வெளிகளில் நெல் விதைப்பதற்கென்று வெளியிடங்கசை் சேர்ந்த விதைப்பாளர்களை கொண்டுவந்திருந்தனர் என்ற குறிப்பும் காணப்படுகின்றது (சிவத்தம்பி,கா., கரவெட்டியின் வாழ்வியல், 2010, ப.27). இலைப் பயிரான புகையிலை அறுவடை செய்த பின் புகையூட்டப்பட்டு, பாணிப்புகையிலையாக சுவையூட்டி,மீண்டும் உலர்த்தப்படுகின்றது. ஒல்லாந்தர்காலப்பரப்பிலிருந்து இம்முயற்சி இற்றைவரைக்கும் தொடர்கிறது. ஒல்லாந்தர் காலத்தில் மலையாளதேசத்திற்கு இச்சுவையூட்டப்பட்டு உலர்த்தப்பட்ட பாணிப் புகையிலை வண்ணான்குளம்-நித்தியவெட்டையிலிருந்து தொண்டமானாற்றின் படகுப்பாதையூடாக ஏற்றுமதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நித்தியவெட்டைக்கு மிக அருகாமையில் கண்டுபிடிக்கப்பட்ட ஒல்லாந்தர்காலக்கட்டிடமொன்று அண்மையில் வரலாற்று வெளிச்சத்திற்கு கொண்டுவரப்பட்டமையும் குறிப்பித்தக்கது ( புஸ்பரட்ணம், ப., வலம்புரி, 2017, ப. ).

### மீன்பிடி

தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கின் இருபக்கங்களிலும் மீன்பிடியும் உயர்வான பொருளாதாரத்தை ஈட்டித் தந்த மிகத்தொன்மையான தொழில் நடவடிக்கையாகக் கொள்ளப்படுகின்றது. ஒல்லாந்தர் காலத்து மத்தொனிக் கிராமம் முற்றுமுழுவதுமாக மீன்பிடிச் சமூகத்தைக் கொண்டதாகவே காணப்பட்டது. இவர்களை விடவும் கரவெட்டி, கரணவாய் என அனைத்துப் பிரதேச மக்களும் மீன்பிடியில் மத்தியகாலப்பரப்பில் ஈடுபட்டிருந்தனர். இவர்களில் பெண்களும்

மீன்பிடியில் ஈடுபட்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. சமூகத்தில் மிகவும் வறுமை நிலைப்பட்டவர்களே இதில் பரவலாக ஈடுபட்டு அதிகளவான இலாபத்தையும் ஈட்டியுள்ளனர். ஆனால் இன்று இத் தொண்டமானாற்று வடிகால் நன்னீராக மாற்றப்பட்டதைத் தொடர்ந்து மீன்பிடி முற்றமுழுதாக கைவிடப்பட்டுள்ளது. இந்நிலை அவர்களது பொருளாதாரத்தை வீழ்ச்சி நிலைக்கு கொண்டு சென்றது. ஒல்லாந்தர் காலப்பரப்பில் மீனவர் சமுதாயம் பெருமளவில் முன்னேற்றம் கண்டிருந்தனர் என்றே கூற வேண்டும். இன்றும் கரை வலை, வீச்சு வலை, சூரை வலை, திருக்கை வலை, கட்டு மரம் தூண்டில், போன்றவற்றின் மூலம் மீன்பிடி. தொண்டமானாற்றில் மேற்கொள்ளப்படுகின்றது. (சிவகுமார்,ஜெ.,1973,பக் 40-45.) மணலை, திரளி, சாளை, பொடி மீன், சிங்க இறால், திருக்கை, நெத்தலி, போன்றனவும் வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்பட்டது மாரி காலத்தில் பாய்ச்சல் நீருடன் சேர்ந்து இப்பிரதேசத்தில் மீன் வந்து தங்கி வளர்வதனால் மார்கழி மாதத்தில் இருந்து சித்திரை வரை மீன்பிடி அமோகமாக நடைபெறுவது வழக்கமாகும்.

**கால்நடை மற்றும் பறவைகள் வியாபாரம்**

தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மக்களது பொருளாதார ஈட்டத்தில் கால்நடைகளின் பங்கும் அளப்பரியதாகும். ஒல்லாந்தர்களது வாணிப நடவடிக்கைகளில் ஆடு மாடு கோழி புறா எனப் பலவும் உள்ளடக்கப்பட்டிருந்தன. இறைச்சி, பால், முட்டை எனப் பலவகையான உணவுப்பொருட்கள் தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கிலிருந்து தென்னிந்தியாவுக்கு குறிப்பாக மலையாளத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. தென்னிந்தியாவிலுள்ள பளையகாரிட் என்ற மையமே ஒல்லாந்தர்கால நெசவு உற்பத்திக்கு பெயர்போன தொழிற்சாலைகளைக் கொண்டிருந்தது. தொண்டமானாற்றுப்பள்ளத்தாக்கிலிருந்து சாயவேரிலிருந்து தயாரிக்கப்பட்ட பலவர்ணச் சாயங்கள் பளையகாரிட் என்ற இடத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. கோழிச்சாயம் எனக்குறிப்பிடப்படும் வர்ணச் சேர்க்கையை உருவாக்கவர்கள் ஒல்லாந்தரேயாவர். இதனைப் பயன்படுத்தும் முறையை மேலே குறிப்பிடப்பட்ட கிராமங்களில் இன்றும் காணமுடியும். மண்டான், சோழங்கன், மத்தொனி போன்ற பிரதேசங்களில் கோழிகள் அதிகளவில் சாயம் பூசி வளர்க்கப்படுகின்ற முறையைக் காணமுடியும்.

தொண்டமானாற்றின் மூலம் பொருட்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்டது என்ற கருத்தில்முரண்பாடு இருக்கமுடியாது. கருணாகரத் தொண்டமான் உப்பை பெற்றுக்கொள்ளவே இவ் ஆற்றை அமைத்தான் என செவிவழிமரபு கூறுகின்றது. ஒல்லாந்தர் ஆற்றின்போக்கில் நடுவில் மரக்கலம் செலுத்தக்கூடிய வகையில்ஆழமான வாய்க்காலினை ஆழமாக அமைத்து கப்பல் போக்குவரத்திற்குரிய வழியை தொண்டமானாற்றில் அமைத்துக் கொண்டிருந்தனர். இவ்வாற்றுப்பள்ளத்தாக்கில் மத்தியகாலம் தொட்டு ஏற்றுமதி, இறக்குமதி, பண்டமாற்று வர்த்தகம் என்பன மேற்கொள்ளப்பட்டு வந்திருந்த நிலையை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் தொல்பொருட்கள் கிடைத்துள்ளன. . குதிரை, யானை, வாசனைத்திரவியங்கள் எனப் பலவும் இவ் ஆற்றின் மூலம் ஏற்றுமதி - இறக்குமதி செய்யப்பட்டது. உப்பு இங்கிருந்து கருணாகரனால் ஏற்றுமதி செய்யப்பட்டதோடு, சங்கிலி மன்னன் காலத்திலும் அதனைத் தொடர்ந்து வந்த போத்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்திலும் அந் நடவடிக்கை தொடர்ந்திருந்தது. (கடந்த முப்பதாண்டுப் போரின்போது இங்கிருந்த உப்பளம் முற்றுமுழுவதுமாக அழிக்கப்பட்டது.) இந்த உப்பளத்தில் வேலை செய்த பலரும் தொழிலினை இழக்கவேண்டி ஏற்பட்டதோடு, பொருளாதாரத்தையும் இழக்கவேண்டியேற்பட்டது. மேலும் நன்னீராக்கல் திட்டத்தின் பின்னர் உப்பு விளைதல் முற்று முழுதாகத் தடைப்பட்டு விட்டது. தொண்டமானாற்றில் விளையும் உப்பை அள்ளி

மத்தொனி, இளமதி, அந்திரான் பிரதேசத்து பெண்கள் விற்பனை நடவடிக்கைகளில் கடந்தகாலங்களில் ஈடுபட்டு வந்துள்ளனர். இன்று இந்த உப்பு விளையாத தன்மை அவர்களது பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாக கொள்ளப்படுகின்றது. இன்று ஆற்றின் மூலமான வர்த்தக நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிட்டாலும், உள்ளூர் உற்பத்திகள் உள்ளூர் சந்தைகளிலும், நெல்லியடி, அச்சுவேலி, கல்வியங்காடு சந்தைகளில் கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகின்றது. மொத்த உப்பு உற்பத்தியின் ஏற்றுமதி வெளி மாவட்டங்களுக்கும் செய்யப்பட்டு வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**குடிசைக் கைத்தொழில்**
**பனைப்பொருள் உற்பத்தி**

ஆரம்ப காலம் முதல் இப் பிரதேசங்கள் சிறந்த பனை வளத்தினை கொண்டிருக்கின்றது "தாலமும் தமிழனும் தலை வணங்காத் தன்மையில் ஒத்தவர்கள்" என்ற கலாநிதி. தக நாயகக்வின் கூற்றுக்கமைய தமிழ் மக்களுடன் இரண்டறக் கலந்து அவர்களின் வாழ்விற்கு வழிகாட்டியாக அமைந்தது பனை வளம். தன்னையே நம்பி வாழும் மக்களின் பசியைப் போக்கும், பஞ்சத்தைப் போக்கும் தாவரமாக அமைந்தது பனையே ஆகும். (மனோன்மணி,ச.,2012,ப 280) யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதான வளங்களான கடல் வளம், நீர் வளம், பனை வளம் எனக் குறிப்பிட்ட வளங்களுள் பனை வளம் முக்கியம் பெறுகிறது. தொண்டமனாற்றுப் பிரதேசம் கடற் காற்றினை தடுத்தும், மழைவீழ்ச்சியை கூட்டியும், மண்ணரிப்பைத் தடுத்தும், தொழில் வளங்களைப பேணியும் மக்களை பேணி வரும் கற்பகத் தருவாய் போற்றப்படுகிறது.

பனங்கைப்பணிப் பொருட்களான தொப்பி, கூடை, விசிறி, பாய், சுளகு, இடியப்பத்தட்டு போன்ற உணவு சாரா உற்பத்திக் கைத்தொழில்களும், பனம்பழம், பனங்கிழங்கு, நுங்கு, கள்ளு, பதனீர் எனப் பல விளை பொருட்களைப் பயன்படுத்தி உணவு சார்ந்த உற்பத்திக் கைத்தொழில்களும் மேற் கொள்ளப்பட்ட வகையினை ஒல்லாந்தர்காலப் பதிவுகள் வெளிப்படுத்துகின்றன. இப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் பனை சார்ந்த உணவுப் பண்டங்களான கிழங்கு, ஒடியல், புழுக்கொடியல், பனாட்டு ஆகியனவற்றிற்கு உள்ளூரிலும், வெளியூரிலும் அதிக சந்தை வாய்ப்புக்கள் இருந்து வருகின்றமையையும் காணமுடிகின்றது. இவ்வாறு பனை வளத்திலிருந்து பெறப்படும் பொருட்களை சந்தைப்படுத்துவதனூடாக அதிக வருமானத்தை தொண்டமானாறு மக்கள் பெற்றிருந்தனர்.

**கயிறுதிரித்தல்**

கயிறு திரித்தல் தொழிலானது இப் பிரதேசத்தில் நீண்ட காலமாக செய்யப்பட்டு வந்த ஒரு தொழில் வகையாகும். இது பாரிய அளவில் இடம்பெறவில்லை எனினும் இங்கு திரிக்கப்பட்ட கயிறுகள் பொதுவாக வட பகுதியில் கோயில்களின் தேர் வடம் இழுப்பதற்கும், கப்பல் தேவைக்கும், மற்றும் பலதரப்பட்ட தேவைக்கும் பயன்படுத்தப்பட்டன. இக் கயிறுகள் அங்குள்ள சிவன் கோயில் வடக்கு வீதியில் திரிக்கும் வழக்கம் நெடுங்காலமாக இருந்து வந்தது. குறிப்பாக 1975 ஆம் ஆண்டு வரை இத் தொழில் நிலவி வந்ததாக ந.நகுலசிகாமணி "வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள்" எனும் நூலில் குறிப்பிட்டடுள்ளார். மேலும் அவர் குறிப்படுவதாவது: கயிறு திரிப்பதற்கு தேவையான உபகரணங்கள் அத்தனையும் சிவன் கோயில் நிர்வாகத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வந்தது. கயிறு திரிப்பவர்கள் இச்சாதனங்களுக்கு வாடகை செலுத்த வேண்டும் என்ற நியதி காணப்பட்டது. கயிறு திரித்த முறை பற்றிக் நோக்கும்போது, சிறப்பாக நங்கூரம் கட்டும் கயிறு (4அங்குல விட்டம்) திரிக்கும் பொழுது எட்டுப் பேர் இணைந்து திரிப்பார்கள். ஒவ்வொரு புரிக்கும் ஒருவராக எண்மர் இணைந்து நங்கூரக் கயிற்றினைத் திரிப்பார்கள். கயிறு திரிக்கும் வேலையில், பழைய மீன்பிடிக்கு பயன்படுத்தப்பட்ட வலைகளை கயிறாக திரித்திருந்தமையையும்,

அக் கயிறுகள் கிணற்று நீர் அள்ளுவதற்கு பயன்படுத்தப்படுமையையும் அறிய முடிகின்றது. . இவ்வாறாக தொண்டமனாற்று பள்ளத்தாக்கு மக்களது சிறுகைத்தொழில் நடவடிக்கைகள் ஜீவனோபாயத்துடன் தொடர்பு பட்டவையாக ஒல்லாந்தர் காலத்தில் இருந்து வருகின்றது.

### நல்லெண்ணெய் ஊற்றல்

தொண்டமனாற்று பள்ளத்தாக்கு மக்களது தொழில் முறைகளில் நல்லெண்ணெய் ஊற்றலும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இத் தொழில் முறையில் இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்பு குடவத்தை, மணலாவடி, நுகாவில், வல்லியாவத்தை போன்ற பிரதேச மக்கள் ஈடுபட்டு வந்துள்ளனர். நல்லெண்ணெய் ஊற்றும் வேலையில் ஆரம்ப காலத்தில் மனித வலுவை மட்டுமே பயன்படுத்தினர். அதாவது பனை நாரினால் இழைக்கப்பட்ட முன்று மூலை அல்லது நான்கு மூலை உள்ள ஊற்றுப் பெட்டியில் காய்ந்த எள்ளைத் திணித்து துலா போன்ற ஒரு மரத்தாலான உருளையை மேற்படி ஊற்றுப் பெட்டியில் வைத்து மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேலாகவும் அசைத்து எண்ணெய் பெறப்படும். இம்முறையில் பெறப்பட்ட எண்ணெய் உணவுத் தேவைக்கே பயன்படுத்தப்பட்டது. இந் நடவடிக்கை இன்று முற்று முழுதாக கைவிடப்பட்ட தன்மையைக் காணலாம்.

### கருவாடு உற்பத்தி- ஒல்லாந்தர் காலக் கைத்தொழில்

இப் பள்ளத்தாக்கை அண்டி வாழுகின்ற மக்கள் முன்பொரு காலத்தில் கருவாட்டு உற்பத்தியில் கைதேர்ந்திருந்தனர். மத்தொளி மக்கள் கருவாடு உற்பத்தியின் மூலம் குறிப்பிடத்தக்க வருமானத்தை இற்றைவரைக்கும் பெற்றிருந்தனர். இவர்கள் பெரிய, சிறிய மீன்களில் கருவாடுகளை தயாரித்ததோடு, இவற்றுக்கு உப்புப் பயன்படுத்தாமை ஒரு சிறப்பம்சமாகும். இவை நீண்ட காலத்திற்கு வைத்துப் பயன்படுத்தப்பட்டதோடு, தென்னிலங்கைக்கு ஏற்றுமதியும் செய்யப்பட்டது. துரியாப் பாரைக் கருவாட்டுக்கு தனியான கிராக்கி காணப்பட்டது. இவற்றை விட கரவெட்டி, மண்டான், வல்லியாவத்தை பிரதேசத்தவர்ளும் சமுதாய மட்டத்தில் கீழ்மட்டத்தில் காணப்பட்ட சாதியினரும் இந் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

### பலகார உற்பத்தியும் சந்தை வாணிபமும்

அந்தணன் திடல், சோழங்கன், தச்சன் தோப்பு, வெல்லன், தழையப்புலம் (தல்லையப்புலம்), எனப் பல கிராமத்து மக்களும் பாரம்பரிய உணவுகளான எள்ளுப்பா(கு), பொரிவிளாங்காய், பனாட்டு என்பவற்றை செய்து வாணிபம் செய்தனர். இன்றும் போத்துக்கீசர், ஒல்லாந்தரால் அறிமுகப்படுத்தப்பட்ட உணவுத்தயாரிப்புக்களுடன் லட்டு, பகோடா, தட்டைவடை, முறுக்கு என்பனவும் பாரம்பரிய உணவு வகைகளாக தயாரிக்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இற்றைவரைக்கும் காலை மற்றும் இரவு உணவுகள் தயாரிக்கப்பட்டு, வீடு வீடாகச் சென்று விற்பனை செய்யப்பட்டு வரும் போக்கும் தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கில் காணப்படும் கிராமங்களிடையே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது..

### நெசவு தொழிலும் ஒல்லாந்தர்களது புடவை வாணிபமும்

தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்குப் பிரதேசத்தில் ஆரம்ப காலத்தில் இருந்தே குடிசைகளில் வைத்து நெசவு செய்யப்பட்டது. நூல் நூற்றலுக்கான சாரீரப்பதனை இப்பள்ளத்தாக்கில் வீசும் காற்றுக் கொண்டிருப்பதனால் ஒல்லாந்தர் காலத்திலிருந்தே நூல்நூற்றலுடன் சாயமூட்டும் தொழிலும் நன்னிலையில் வளர்ச்சி பெற்றிருந்தது. மென்மையான ஈரப்பதன் கொண்ட வல்லைவிலுள்ள காலநிலை இழையங்களை சிதைத்துவிடாது நூல்நூற்றலுக்கும் ஆடைநெய்தலுக்குமான சாதகமான சூழ்நிலையில் உள்ள காரணத்தினால் ஒல்லாந்தர் காலத்திலிருந்து ஆடை உற்பத்தித் தொழில் சிறப்படைந்திருந்தது (கிருஸ்ணராசா, செ., வடஇலங்கைப் பண்பாட்டு உருவாக்கமும் உருவாக்கியவர்களும், 2014,

ப.74). இதன் தொடர்ச்சியாகவே வல்லையில் மின்இயக்கமுறையில் ஆடைத்தொழிற்சாலை இயங்கிவந்தமையும் நினைவு கூரப்படவேண்டும். ஆனால் இன்று அத்தொழில் கைவிடப்பட்டு விட்டது. இருப்பினும் கரணவாய், கரவெட்டி-மத்தி, அத்தாய் ஆகிய மையங்களில் நெசவுத் தொழில் சிறு அளவில் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றது. தச்சன் தோப்பு பிள்ளையார் கோவிலுக்கருகிலும் நெசவுத் தொழில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதில் அக் கிராமத்துப் பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர். சாறி வகைகள், துவாய், பெட்சீட் என்பன பாரம்பரியமாகவே இங்கு நெசவு செய்யப்படுகின்றது. வடமராட்சியில் வியாபாரி மூலை என்ற கிராமம் புடவை வாணிபத்தில் 19ஆம் நூற்றாண்டு வரைக்கும் ஈடுபட்டு வந்திருந்தமை ஒல்லாந்தரது புடவை வாணிகத்தின் செல்வாக்கினையே காட்டுகின்றது.

**முடிவுரையாக**

மத்தியகால யாழ்ப்பாண வரலாற்றின் வளர்ச்சிக்கு நடுநாயகமாக அமைந்த தொண்டமானாற்றின் அமைவும் அதன் பள்ளத்தாக்கின் பங்களிப்பும் வடஇலங்கையில் வரலாற்றுப் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகோலியிருந்தமையுடன் பிராந்திய ரீதியான பண்பாட்டுத் தனித்துவத்தினை பேணுவதற்கு ஏற்றவகையிலும் இப்பள்ளத்தாக்கு அமைந்திருந்தமை ஒரு வரப்பிரசாதமாகும். அதனை வலியுறுத்தும் வகையில் தொடக்கத்தில் கருதுகோள்களாக குறிப்பிடப்பட்டனவற்றை இங்கு நினைவு படுத்துவது பொருத்தமாகும். அவையாவன:

1. பொருளீட்டத்திற்கான கனிய வளங்களைக் கொண்டுள்ள பௌதீக உறுப்பாக விளங்கி வருகின்றமை.
2. குடாநாட்டின் அரசியல், பண்பாட்டுத் தளநிலைமையானது காலங்களினூடாக மாற்றத்திற்குள்ளாகி வந்திருந்த நிலைமிலும் வடமராட்சி மரபுகளையும் அவற்றின் அடையாளங்களையும் தந்த பண்பாட்டுக் கிராமங்களைப் பேணிப்பாதுகாத்து வந்த ஓர் அரணாக விளங்கி வந்திருந்தமை.
3. உள்ளூர் உற்பத்திப்பொருளாதார வாணிபப்போக்குவரத்து இணைப்புக்கான ஒரு புவியியல் அலகாக விளங்கி வந்துள்ளமை.
4. மத்திய காலத் தென்னிந்திய - வட இலங்கையின் சமூக, பொருளாதார நிறுவனங்களை ஒன்றிணைத்திருந்தமை.

இந்த நான்கு செயற்பாடுகளையும் மேலே விபரிக்கப்பட்ட பொருளியல் தரவுகளூடாக தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்குடன் தொடர்புபடுத்தி பார்க்கமுடிகின்றது. வேதாரணியத்துடன் இப்பள்ளத்தாக்குக்குரிய தொடர்பானது பிராமணிய குடியேற்றத்திற்குரியதாக இருந்திருப்பினும், இங்கிருந்து கருவாடு வேதாரணியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட முறையில் கோயிற் பண்பாட்டு நிறுவனங்களையும் தொண்டமானாறு தன்வசம் இணைத்திருந்தது என்பதனை உறுதிப்படுத்த முடிகின்றது என்ற தகவலினை வேதாரணியத்திலுள்ள பதிவுகள் தருகின்றன. தஞ்சாவூருடன் இப்பள்ளத்தாக்கு கொண்டிருந்த தொடர்புகள் மேலும் ஆராயத்தக்கன. யாழ்ப்பாண இராச்சியத்தின் இரண்டாம் தலைநகரம் என்ற நிலையை கோப்பாய் எனவும் சிலர் புட்டளை எனவும் இன்னும் சிலர் பொங்கொலிநீர்ச் சிங்கை நகரான வல்லிபுரமே எனவும் வாதிடுகின்றனர். பருத்தித்துறையிலுள்ள தும்பளை என்ற கிராமமும் யாழ்ப்பாண இராச்சியத்துடன் தொடர்பு பட்டதாக எடுத்துக்காட்டப்படுகின்றது. இவையாவும் தொண்டமானாற்றின் ஊடான போக்குவரத்து வலையமைப்பினூடாக இணைக்கப்பட்டுக் காணப்பட்டன என்பதும் இங்கு மனங்கொளத்தக்கது. இதனைவிட இவ்வாய்வில் தொண்டமானாறுடன் இணைந்த விஜயநகர்கால அரசியல், வர்த்தகப் பண்பாட்டுத் தொடர்புகள் எவையும் எடுத்துக்காட்டப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாற்றுப்பள்ளத்தாக்கின்

இருமருங்கிலும் காணப்படும் கிராமங்களின் பெயர்கள் பெருமளவிற்கு சோழர் மற்றும் விஜயநகர் வம்சாதிக்கத்திற்குரிய பெயர்களாகவே காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. தொண்டைமானார் இராயப்பன் கொடுத்த நெல் 20 கலம் என்ற குறிப்பு இராமநாதபுரம்கோதண்டசுவாமி கோயிலில் வைக்கப்பட்டுள்ள 1715 ஆம் ஆண்டுக்குரிய சாக்காங்குடிச் செப்பேட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. (சேதுபதி செப்பேடுகள் by புலவர் இராசு, 1994,பக்.270-271.) தொண்டைமான் சோழிய வரையனுக்கு முத்துரகுநாதசேதுபதியினால்( காத்ததேவர்)1763ஆம் ஆண்டில் ஈழமும் கொங்கும் யாழ்ப்பாணப்பட்டினமும் அளித்து நிர்வகித்த செய்தி அரியகுடிச்செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது (STI, vol.III,Part-I p.1142.). இவ்வாதாரங்கள் தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்குப்பிரதேசம் முழுவதும் சோழர் காலத்திலிருந்து பொருண்மிய நடவடிக்கைகளுக்குட்பட்டு வந்திருக்கவேண்டும் என்பதனை உறுதிப்படுத்துவதாக உள்ளன. தஞ்சைப்பிருஹதீஜ்வரர் கோயிலுக்கு தொண்டமானாற்றில் விளைந்த உப்பு எடுத்துச் செல்லப்பட்டதாக கர்ணபரம்பரைக் கதைமரபுகள் எடுத்துக்காட்டுகின்றன. சோழங்கன், சோனப்பு (சோழஉப்புப் புலம்), சோழன்கட்டு, சோழன் தோட்டம், கங்குண்டான் ( கங்கை கொண்டான்), வீரணன்கல் (வீராணம்கால்வாய், பெரியதோட்டம், மாவில், அந்தணன்திடல், அத்தாய் போன்ற மக்கள் குடியிருப்புக்கிராமங்கள் சோழர்காலத்து பொருண்மிய, பண்பாட்டு நிலைகளை உறுதிப்படுத்துவனவாக உள்ளன. எனவே இவ்வாய்வானது தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படும் நிலையிலேயே மத்தியகால யாழ்ப்பாணத்தின் பொருளாதார வலைப்பின்னல் அமைப்பில் தொண்டமானாற்றின் பங்களிப்பினை மிகத் தெளிவாக கண்டு கொள்ள முடியும் .

**உசாத்துணை நூல்கள்**


1. இராசநாயகம்,செ.; யாழ்ப்பாணச் சரித்திரம் , (மீள்பதிப்பு), ஏசியன் எடுகேஷனல் சர்வீசஸ், சென்னை 2003
2. கணபதிப்பிள்ளை,க., ஈழத்துவாழ்வும் வளமும், (மீள்பதிப்பு), குமரன் புத்தக இல்லம் கொழும்பு – சென்னை, 2001.
3. கிருஷ்ணராசா, செ.; இலங்கைவரலாறுஇ பாகம் -2 பிறைநிலா வெளியீடு, 2005 .
4. குணசிங்கம். மு. இலங்கையில் தமிழர் ஒரு முழுமையான வரலாறுஇ கி.மு. 300 கி.பி 2000) M.V வெளியீடு, தென் ஆசியாவின் மையம் சிட்னி, 2008.
5. சிவராசாசிங்கம்.ஏ் ஈழவரலாற்றுப் பதிவுகள்இ யுசசழறறநழீரடிடளைாநசளஇ வுழசழவெழ இ ஊயயெனயஇ 2003
6. தியாகராஜா. எஸ் ஈழத்தமிழரின் ஆதிச்சுவடுகள், தேசம் வெளியீடு, இலண்டன் 2004,
7. ஜெயக்கொடி,சிவகுமார்., 1973 யாழ்ப்பாணக் குடாநாட்டின் கடற்கரை பகுதியினது புவி வெளியுருவவியல் வடக்கே தொண்டமானாறு முதல் கிழக்கே சுண்டிக்குளம் வரை) (unpublished)
8. சூசை,ஏ.எஸ்., 1994. தொண்டமானாறு ஏரியும் அதன் புவியியல் பின்னணியும்,யாழ்ப்பாணப் புவியியலாளன் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.
9. இராஜேஸ்வரன்,எஸ்.ரி,பி., 2011.யாழ்ப்பாணக்குடாநாட்டினதும் அதன் அயலில் அமைந்துள்ள தீவுகளினதும் தோற்றம்,யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்
10. வேலுப்பிள்ளை,க.,1918, யாழ்ப்பாணவைபவகௌமுதி ,சயஸ்ரீ சாரதா பீடேந்திரசாலை.
11. இந்திரபாலா,கா.,1972,யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம்,யாழ்ப்பாணத் தொல்லியல் கழகம்,வட்டுக்கோட்டை.
12. சிவலிங்கராஜா,எஸ்.,1984, வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கிய வளமும், வடமராட்சிக்கல்வி வட்டம்.,கரவெட்டி.

13. சிவலிங்கராஜா,எஸ்.,2014, யாழ்ப்பாணப் பண்பாடு: மறந்தவையும் மறைத்தவையும், யாழ்ப்பாணம்
14. புஸ்பரட்ணம்,ப.,2012,யாழ்ப்பாணவாழ்வியல்,கலைக்கேசரி எக்ஸ்பிரஸ்.வெளியீடு
15. பாலசுந்தரம்,இ.,1989, இலங்கை இடப்பெயர் ஆய்வுகள்(வடமராட்சி-தென்மராட்சி),வல்லிபுரம் இந்து கல்வி கலாச்சார மன்றவெளியீடு.
16. சிவச்சந்திரன்.இரா.,1986,யாழ்ப்பாணப் புவியியலாளன்,இதழ் 4,யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.
17. விஜயகுமார்,சி.,2010 கரவெட்டியின் வாழ்வியல்,துரை பதிப்பகம்.,கரவெட்டி.
18. ஆனந்தகுமாரசுவாமி,க.,2009, தச்சைதிருப்பதி வரலாறு,பிள்ளையார்அச்சகம், கரவெட்டி.
19. கிருஸ்ணமூர்த்தி,ச.,திருவாவடுதுறை ஆதீனச் செப்பேடுகள், சென்னை,2000
20. புதிய கட்டடத்திறப்பு,2005., விழா,சிறப்பு மலர்.,பிரதேச செயலகம் வடமராட்சி தெற்கு- மேற்கு, கரவெட்டி.
21. கலாமணி,த. (பதிப்பாசிரியர்), திருவுடையாள்,பிரதேசமலர் கலாசாரப்பேரவை 2007,2008,2011,2014, கரவெட்டி.
22. கிருஸ்ணராசா, செ.,தொல்லியலும் வடமராட்சியின் பண்பாட்டுத் தொன்மையும்,பிறைநிலா வெளியீடு, கோண்டாவில,2015.
23. சர்மா, R.S., இந்திய நிலமானியமுறை, NCBH வெளியீடு, 2009,சென்னை,
24. Thiagarajah, Siva., Peoples and Cultures of Early Sri Lanka, A Tamil Information Centre Publication, Greate Britain.
25. 28 Pathmanathan,S., HinduTemples in Sri Lanka,Kumaran Book House, Colombo, 2006. .
26. Mathanakaran,R., 'Geographical Background of Jaffna',Appendix-I in Early Settlement of Jaffna By Ragupathy,1987,
27. கிருஸ்ணராசா,செ., 'வடமராட்சியில் இனங்காணப்பட்ட தொல்லியல் சான்றுகளும் புராதன மையங்களும்', யா/ வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம் 110 வது ஆண்டு நிறைவு மலர், 2004, பக்.92-113
28. Deraniyagala,S., Prehistoric basis for the rise of Civilization in Sri Lanka and Southern India, 2004, Chenni, p.4/ The Prehistory of Sri Lanka ,Part.I.,1992.
29. Deraniyagala,S., The Prehistory of Sri Lanka ,Part.I.,Colombo, 1992.
30. Anparasi,R., The Cultural Influences of the Dutch in Northern Sri Lanka – A Study.,unpublished M.A. Thesis, university of Jaffna, 2010.
31. சுந்தரலிங்கம்கணபதிப்பிள்ளை(பதிப்பாசிரியர்),வன்னிவரலாறும்பண்பாடும்,2014,சென்னை.
32. கிருஸ்ணமூர்த்தி, ச., திருவாவடுதுறை ஆதீனச்செப்பேடுகள், சென்னை, 2000.
33. விஜயகுமார் சின்னத்துரை(ப.ஆ), கரவெட்டியின் வாழ்வியல், அமரர் சித்தர் சின்னத்துரை நினைவு வெளியீடு,2010, கரவெட்டி.
34. கிருஸ்ணராசா, செ., வடஇலங்கைப் பண்பாட்டுத்தளத்தின் உருவாக்கமும் உருவாக்கியவர்களும்:தொல்லியல் மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு விளக்கம், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை-2014, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்
35. லூயிஸ், ஜே.பி., இலங்கையின் வன்னி மாவட்டங்கள் ஒரு கையேடு (தமிழ் மொழிபெயர்ப்பு), சேமமடு பதிப்பகம், 2012
36. சிவக்குமார், ஜெ., குடாநாட்டின் கடற்கரையோர நிலவுருவங்கள்: தொண்டமானாற்றிலிருந்து சுண்டிக்ககுளம் வரைக்கும், 1973, (பிரசுரிக்கப்படாதது.)
37. South Indian Temple inscriptions, Vol III, Part I, P.,1142, Madras, 1937